புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஹு நவம்பர்மீ 25உ [ந. 225

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—20-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXV.

## சமாதானத்துக்கு முயற்சி.

(விக்ஹாம் ஸ்டீட், 1944-ம் ஹு நவம்பர்மீ 11உ).

பிரிடிஷ் பொதுமக்களின் கவனம் இப்பொழுது இரண்டு முக்கிய பிரச்னைகளில் செலுத்தப்படுகிறது. முதலாவது, யுத்தத்தில் துரிதமாக வெற்றிபெறுவது. இரண்டாவது சமாதானத்தையும் சீர்திருத்தத்தையும், பிரிடனில் ஜனசமூக சமாதானத்தையும் புனருத்தாரணத்தையும், ஏற்படுத்தப் பூரணமாக ஒத்துழைப்பது.

யுத்தம் நமக்கு சாதகமாகவே இருந்து வருகிறதென்றும், ஜெர்மன் காட்டுமிருகம் உக்கிரமாகப் போர்புரிகிறதென்றும் பிரிடனின் விமானப் படை இலாகா மந்திரி சொல்லிவிட்டார். ஐரோப்பியப் போரை முடிவு செய்ய மகத்தான முயற்சி இப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னார். பறக்கும் வெடிகுண்டுகளை விட ராணுவ முறையில் சற்று உபயோகமுள்ளதான நூதன ஆயுதங்களை ஜெர்மனி உற்பத்தி செய்யக்கூடும். நேசதேசத்தார்கள் புதிய ஆயுத உற்பத்திகளால் ஜெர்மனியை பிரமிக்கச் செய்திருக்கிறார்கள். ஜெர்மனியின் உற்பத்தி சக்தியையும் தாண்டிச் சென்றிருக்கிறார்கள். இன்னும் அநேக புதிய ரகங்களை ஜெர்மனி பிரமிக்கும்படியாகவும் கண்டுபிடிப்பார்கள். ஆகிலும் அவர்கள் ஜெர்மன் பலத்தைத் துரிதமாக அழித்துவிட வேண்டும்.

பிரிடிஷ் விமானப்படை இலாகா மந்திரி சொற்பொழிவாற்றியபொழுது 5,000 நேசதேச விமானங்கள் ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்களையும், யுத்த தொழிற்சாலைகளையும் பலமாகத் தாக்கி வந்தன என்று சொன்னார். மேற்குப் போர்முனையில் இது முதல் தரமான நடவடிக்கையாகும். மேலும் மகத்தான தரைப்போருக்கு இது முற்போக்கான நடவடிக்கையாகும்.

ஆண்ட்வெர்ப் துறைமுகத்துக்குச் செல்லும் வழிகளைக் காப்பாற்ற ஜெர்மானியர்கள் ஊக்கமாகப் போர் புரிந்த போதிலும், அந்த வழிகளையெல்லாம் அது இழந்துவிட்டது.

ஆண்ட்வெர்ப் வழியாக ஏராளமான சர்பராக்கள் வரக்கூடுமாகையால், மேற்கு ஜெர்மனியை இறுதியில் தாக்க ஏற்கனவே குவிக்கப்பட்டிருக்கும் தளவாடங்கள் பன்மடங்கு அதிகரிக்கக்கூடும்.

கிழக்குப்பக்கத்திலும், ஹங்கேரியிலும் உள்ள ருஷ்யப்படைகள் ஜெர்மன் தற்காப்புகளைப் பலமாகத் தாக்கிவருகின்றன. 1944-க்குள் ஜெர்மனியின் எதிர்ப்பு குலைக்கப்பட்டாலும், படாவிட்டாலும், அதன் முடிவு இனிமேல் தாமதிக்கப்படமாட்டாது. இந்தக் காரணத்தைக்கொண்டுதான் பிரிடன், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னதுபோல், யுத்தத்தை சீக்கிரம் முடிப்பதில் கவனம் செலுத்துவதுடன் சமாதானத்தை அமைப்பதற்கும் அக்கரை எடுத்துக்கொண்டுள்ளது. நேசதேசக் கக்ஷியிலுள்ள பெரிய வல்லரசுகள் மற்ற நாடுகளுடன் கலந்து சமாதான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லுவதை பிரிடனும் மனதார ஒப்புக்கொண்டுவிட்டது. நேசதேச சமஷ்டியும் விருத்தியடைந்தே வருகிறது.

பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமிடையே உள்ள ஒத்துழைப்பு நெருங்கியதாகவும் நிரந்தரமாகவுமிருக்கும். ருஷ்யமக்களுக்கு வருஷ விழாவன்று மார்ஷல் ஸ்டாலின் ஆற்றிய சொற்பொழிவை பிரிடன் வரவேற்கிறது. ஐரோப்பாவில் பிரிடனும் ருஷ்யாவும் மிகவும் செல்வாக்குள்ள வல்லரசுகளாகயிருக்கக்கூடுமாகையால், ஐரோப்பிய சமாதானத்தை நிறுவவும், அதன் ஸ்வரூபத்தை நிர்த்தாரணம் செய்யவும், அவைகள் தான் முக்கியமான பொறுப்பெடுத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் ருஷ்யாவின் கொள்கையைப்பற்றி பிரிடன் சொல்லும் அபிப்பிராயம் முக்கியத்துவமுள்ளது.

ஐரோப்பாவில் ருஷ்யா அதனுடைய சொந்தமான எல்லைச் சரகத்தைத் தாண்டி அதன் ராஜ்யத்தை விஸ்தாரம் செய்துகொள்ள எண்ணம் கொண்டிருக்கவில்லையென்று திறமையுள்ள பிரிடிஷ் உற்று நோக்காளர்கள் நம்பியிருக்கிறார்கள். பிரிடனைப்போல ருஷ்யாவும் எதிர்காலத்தில் போர் மூளாமல் இருக்க உலக பத்திரம் வேண்டுமென்கிறது. ஹாலந்தும் பெல்ஜியமும் முக்கியமாக உள்ள வடமேற்கு ஐரோப்பா பிரதேசத்தை மற்றெந்த ஐரோப்பிய வல்லரசும் ஆக்கிரமிக்காமல் காப்பாற்றப்படவேண்டுமென்று பிரிடன் வெகுகாலமாக எண்ணுவதுபோல, ருஷ்யாவும் அதற்கு மேற்குப் பக்கத்திய எல்லைச் சரகம் பத்திரமாக இருக்கவேண்டுமென்றும், எல்லைக்குச் சமீபத்திலுள்ள தேசங்களும் சுதந்திரத்துடனும் நட்புடனும் இருக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறது.

ருஷ்யாவும், பிரிடனும், அமெரிக்காவும் ஐரோப்பாவில் எதிர்காலத்தில் அக்கிரமப்போர் மூளாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும். ஜெர்மனியை எவ்விதம் நடத்துவதென்பதில் அவர்கள் ஏகோபித்த மனதுடன் இருப்பார்கள். ஜெர்மனியை ராணுவ முறையில் நிராயுதபாணிகளாக்கி விடுவார்கள். பொருளாதார முறையில் யுத்தக் கைத்தொழில்களை ஜெர்மனி நடத்தாமலும் செய்துவிடுவார்கள்.

ஐரோப்பாவில் பொது உடைமைக் கொள்கையை ருஷ்யா பரவச்செய்ய முயற்சிக்குமென்று பிரிடனில் பொறுப்புள்ள எந்த வட்டாரத்திலும் அச்சம் ஏற்படவில்லை. யுத்த காலத்தில் மேற்கு ஐரோப்பாவிலும், பிரிடனிலும் ஏற்பட்டுள்ள மிகுதியான, ஜனசமூக, பொருளாதார மாறுதல்கள், ஜனசமூக, பொருளாதாரக்கொள்கைகளில் பிரதிபலிக்குமென்று எதிர்பார்க்கப்படவேண்டும். அதன் மூலம் வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிந்துவிடும், திறமை அதிகரிக்கும், வாழ்க்கைமுறை அபிவிருத்தியடையும்.

1919-ம் வருஷத்திற்கும் 1939-ம் வருஷத்திற்கும் இடையே நிலைபெற்றிருந்த நிலைமை மறுபடியும் ஏற்படுமாறு பிரிடன் முயற்சிக்கப்போவதில்லை. பொதுஜன இன்ஷ்யூரன்ஸ், வறுமையின்மை முதலியவற்றைப் பற்றிய அரசாங்கத்தாரின் திட்டங்களைப்பற்றி காமன்ஸ் சபையில் சமீப காலத்தில் நடைபெற்ற சர்ச்சையைக் கவனிக்கும்பொழுது இந்த உபயோகமுள்ள சீர்திருத்தத்தை காலதாமதமன்னியில் கொண்டுவரவேண்டுமென்று உணர்ந்ததினால் சர்வகக்ஷிகளினிடையே ஆழ்ந்த அக்கரையும், மகத்தான ஒற்றுமையும் காணப்பட்டதென்று வெளிப்படுகிறது.

இவ்விதமாக, ஐரோப்பாவில் போரில் துரிதமாக வெற்றி பெறுவதற்காக பிரிடன் தன்னுடைய கவனத்தைச் செலுத்திவருவதும், சமாதானத்தை நிறுவ நேசதேசத்தார்களுடன் அது ஒத்துழைப்பதும் உள் நாட்டில். ஜனசமூக சீர்திருத்தம் செய்வதில் பிறநாட்டாருக்கு ஒரு உதாரணமாக இருக்கவேண்டுமென்ற தீர்மானமும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. சர்வ தேசங்களுக்குள்ளும் பொதுவாக ஜன சமூகத்திலும் சமாதானத்தை நிறுவுவது தான் எதிர்காலத்திய முக்கியமான பிரச்னை. இந்த வேலையைக் கையாண்டு வெற்றிகரமாக முடித்துவிடக்கூடுமென்று பிரிடிஷ் மக்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள்.

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 14—11—44 (செவ்வாய்க்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஹாலந்தில் மாஸ் நதிக்கு மேற்கில் புதிய தாக்குதலைத் துவக்கின. நேசதேசப்படைகள் பர்மாவில் பாமோவை வளைத்துக் கொண்டன. |
| 15—11—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் கலிமியோவைப் பிடித்தன. அமெரிக்கர்கள் நியூகினியாவுக்கு அப்பாலிலுள்ள மாபி யாத்தீவிலிறங்கினார்கள். |
| 16—11—44 (வியாழக்கிழமை). | நேசதேச 5-ம் படை இதாலியில் மோடிக்ளியானாவைப் பிடித்தது. |
| 17—11—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப் படைகள் மேற்குப்போர்முனை பூராவிலும் முன்னேறிவிடுகின்றன. |
| 18—11—44 (சனிக்கிழமை). | போலீஷ் துருப்புகள் இதாலியில் மாண்டிபோர்டினோவுக் குள் நுழைந்தன. |
| 19—11—44 (ஞாயிற்றுக்கிழமை). | பிரிடிஷ் படைகள் கிலன்கெர்சனை ஆக்கிரமித்தன. செம்படை புடாபெஸ்டுக்கு வடகிழக்கிலுள்ள கியோ யெங்கியோஸை ஆக்கிரமித்தன. |
| 20—11—44 (திங்கட்கிழமை). | சீனப்படைகள் பர்மாவில் பாமோவை ஆக்கிரமித்தன. பிரென்சுப் படைகள் பெல்போர்ட் வழியாக ஊடுருவிச் சென்று பெல்போர்ட் நகரத்தைப் பிடித்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) இங்கு ஆறு நேசதேசப்படைகள் போர்புரிகின்றன. இவை வின கனடியப் படைகள் கடற்கரையில் போர் புரிந்து வருகின்றன. ஆறு படைகளில் நான்கு ஜெர்மன் பூமியில் இருக்கின்றன. இந்த வாரத்தில் பிரிடிஷ் இரண்டாவது படை ஜெர்மனிக்குள் புதிய தாக்குதலைத் துவக்கி கிலன்கொர்சனைப் பிடித்தது. அமெரிக்க 9-வது படையும், பிரெஞ்சு முதல் படையும் இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டன. நேசதேசப்படைகள் ரைன் நதிக்கரையில் நின்று கொண்டிருக்கின்றன. ஸார் நதிப் பள்ளத்தாக்குக்குள் புகுந்து விட்டன. பெல்போர்ட் விடுவிக்கப்பட்டது. மெட்ஸில் எதிர்ப்பு நின்றுவிட்டது. ஜெர்மன் படைகள் ஹாலந்தில் எண்டோவன்—வென்லூப்பகுதியிலிருந்தும், லோரென் சமவெளியிலிருந்தும் வாஸ்கஸ் பகுதியிலிருந்தும் பின்வாங்குகிறார்கள். அலாஸ்கா மாகாணம் அநேகமாக விடுவிக்கப்பட்டது.

(2) வென்லூவுக்கும், ரோயர்மாண்டுக்கும் மத்தியில் டெம்ப்ஸியின் புதிய தாக்குதல் திருப்திகரமாக நடைபெறுகிறது. ஹோரு, பேய்க்ஸாம், ஹெவ்தினிஜ்ஸன், கிராதாம், வெஸ்ஸன், பக்கிமம் முதலிய இடங்கள் விழுந்துவிட்டன.

(3) அமெரிக்கர்கள் கீழ்கண்ட இடங்களைப் பிடித்தார்கள். பப்பன்டார்ப், மேரியான் டார்ப், வர்ஸ்லென், ரெமெலிங், ஷ்வீலர், ஸ்டக்கரென்ஜ், பாரி, ஓபர், ஷெண்டார்ப், மெர்ஷ்விலர், ரிட்ஸிங்க்.

(4) பிரெஞ்சுப் படைகள் மாண்டபெல்லியார்ட், ஹெகன்ஹீம், கார்னே, தான், முதலியவற்றைப்பிடித்தன. பெல்போர்ட்டும் பிடிபட்டது. மல்ஹௌஸுக்குள்ளும், ஸ்ட்ரான்பர்க்குக்குள்ளும் புகுந்துவிட்டார்கள்.

**கிழக்குப் போர்முனை.—**

புடாபெஸ்டுக்காக போர் கிழக்கு முதல் மேற்குவரையிலுள்ள பிராந்தியத்தில் நின்றுவிட்டது. நகரத்தின் வடகிழக்கில் போர் நடைபெறுகிறது. செம்படை புடாபெஸ்டுக்கு வடகிழக்கிலுள்ள கியோயென்கோலேப்பிடித்தது.

ருஷ்யப்படைகள் ரீகா வளைகுடாவிலுள்ள ஓசல் (சாரமா)த்தீவிற்குள் நுழைந்து ஸெஷவீலா விட்டார்கள்.

**ஆல்பேனியா.**—அதன் தலைநகரமான டிரானு விடுவிக்கப்பட்டது.

**இதாலி.**—நேசதேசப்படைகள் ராவென்னுவையும், போலோனுவையும் நோக்கிமுன்னேறுகின்றன. மாண்டிசான் பார்டோலோ, சான்வெர்செல்லி, மொடிக்ஸியானு, தோல்பாரா விடுவிக்கப்பட்டன.

**பஸிபிக் போர்.**—அமெரிக்கப்படைகள் நியூகினியாவுக்கு அப்பாலிலுள்ள மாத்யூத்தீவிலிறங்கின. மாபியாத்தீவில் படையெடுத்தன. அவைகள் பாலாத்தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஙபரிகாங்க்த் தீவைத்திரும்பிப்பிடித்தன. புயல் காற்றடித்ததால் லேயிடியில் நடைபெற்ற போர் தடைபட்டது. விமானில் கடும் போர் நடைபெறுகிறது.

**பர்மா.—**

20-ம் தேதி வந்த கடைசிச்செய்தியில் பின்கண்ட விவரங்கள் காணப்படுகின்றன.

(1) **வடபர்மா.**—சீனப்படைகள் பாமோவுக்குள் புகுந்தன.

(2) **சிண்ட்வின் போர்முனை.**—கிழக்கு ஆப்பிரிக்கப்படைகள் பாலுசாவ் நதியின் மேற்குக் கரையிலிருந்து எதிரிகளை அப்புறப்படுத்திவிட்டன.

(3) **அரக்கான்.**—பூதெடாங்குக்கருகிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்கள் பேரில் பீரங்கி பிரயோகம் செய்யப்பட்டது.

(4) **காலடான் பள்ளத்தாக்கு.**—பாலட்வாவைச் சுற்றி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

**சைனு**—ஜப்பானியர்கள் தெற்குச் சைனுவில் குவாங்க்ஸி மாகாணத்தைச் சேர்ந்த லூசௌவையும் இஷெணேயும் பிடித்தார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**12—11—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—பலத்த முனைகள், பீரங்கி ஸ்தாபனங்கள், டாங்கிகள், துருப்புகள், முகாம்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரயில் பாலங்கள்.—சிங்ஸிக் (Sinczig) பஸ்கிர்க்தான் (Fuskirkthen), மேயன் (Mayen)

ரயில் இலக்குகள்.—கெல்ஸென்கிரிச்சன் (Geilsenkirchen), டிரையர் (Trier), கொலோன் (Cologne).

போக்குவரத்து இலக்குகள்.—ஹாலந்து (Holland).

ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்.—நார்வேயில் டிராம்ஸ்சோ பிஜோர்ட் (Tromso Fjord), "டிர்பிட்ஸ்" மூழ்கடிக்கப்பட்டது.

ரயில் பாலங்கள்.—பிரென்னர் பாஸ் (Brenner Pass).

ராணுவ இலக்குகள்.—வட இதாலி (N. Italy), போ (Po) சமவெளி.

போக்குவரத்துகள்.—அல்பேனியா (Albania), யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸ்தாபனங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), நியூ அயர்லாந்து (New Ireland), புகா (Buka)விற்கு தெற்கு.

ஸப்ளைக் குவியல்கள்.—வீவாக் (Wewak) பிரதேசம்.

### பர்மா (Burma).

பெரிய நீராவி யந்திரங்கள் தங்குமிடங்கள், படகுகள்.—தாஸி (Thazi).

சேமிப்புகள்.—லாஷியோ (Lashio)விலிருந்து, மான்கட் (Mankat)குள், சிங்கு (Singu)விற்கும் காதா (Katha)விற்குமிடையிலுள்ள நதி.

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—கினு (Kinu).

13—11—44. (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

துருப்பு முகாம்கள்.—பீரங்கி ஸ்தாபனங்கள் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
பாலங்கள் ரஸ்தாக்கள், ரயில், போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
கப்பல்கள்.— எட்ரியாடிக் (Adriatic).
போக்குவரத்துகள்.— யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
(2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

வேவுபார்த்தல்.—பிலிப்பைன்ஸிலுள்ள விஸாயாஸ் (Visyas). (16 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
கப்பல்கள்.—டலாவான் (Talawan).

**பர்மா (Burma).**

பாலங்கள்.— பர்மா(Burma)-ஸியாம் (Siam) ரயில்வே.
எதிரி சைனியங்கள்.-சிண்ட்வின் (Chindwin).
நீராவி யந்திரங்கள்.-ஷுவேபோ (Shwebo).
மின்சார நிலயம், ராணுவ நிலயங்கள்.—ஸினிற்கு (Se-en) வடகிழக்கு.
விமான நிலயங்கள்.—காலின் (Kawlin), நாங்கியோ(Nawngkhio).
பாலங்கள்.-பர்மா (Burma), சியாம் (Siam) ரயில்வே, பெகுவிற்கும் (Pegu) மார்ட்டாபனிற்கும் (Martaban) இடையிலுள்ளவைகள்.

14—11—44. (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.— பலமான முனைகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.— ஐரோப்பாவில் மேற்கு அரங்கம்.
போக்குவரத்துகள் இதர இலக்குகள்—வட இதாலி (N. Italy).
எதிரிக் கப்பல்கள்.—நார்வே (Norway).
எதிரி சைனியங்கள்.— ஹங்கேரியில் உள்ள டான்யூப் (Danube) மேல்கரை.
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள்.—ரங்கூன் (Rangoon).
ரயில்வே தளங்கள்.—யுவாடாங் (Ywataung).
படகுகள்.—மத்திய பர்மா (Central Burma).
4 பாலங்கள்.—காலீவாவின் தென் கிழக்கு.
படகுகள்.—மார்டாபன் (Martaban).
ஸ்டோர் பிரதேசங்கள்.—காலின் (Kawlin).
விமான நிலயங்கள்.— ஆன்பாக் (Onbauk).

15—11—44. (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—இலக்குகள்— ஆஸ்திரியா (Austria), யூகோஸ்லாவியா (Yugoslavia).
ராணுவ இலக்குகள்.—இதாலிய யுத்த அரங்கம், அல்பேனியா (Albania).
கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).
ஜெர்மன் சைனியங்கள்.-போ (Po) சமவெளி, பொலோனு (Bologna) யுத்த அரங்கம்.
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.
இரவு.—இலக்குகள்— பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.— பிலிப்பைன்ஸ் (Philippines), தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific).
கடற்கரை கப்பல்.—டிமோர் (Timor), மிண்டானோ (Mindanao).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).
எதிரி முனைகள், இதர இலக்குகள்.—காலிவா (Kalewa).
ஜப்பானிய பீரங்கி ஸ்தாபனங்கள்.—மற்ற இதர இலக்குகள் பாமோ (Bhamo).

16—11—44 (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எற்றிறக்குமதி இலக்குகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—தாய்ன்வில்லி (Thionville) பிரதேசம்.
தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—டார்ட்மண்ட் (Dortmund).
இலக்குகள்.—பிரென்னர் (Brenner Pass) கால்வாய்.
ரயில்வேக்கள்,—வட இதாலி (N. Italy).
எதிரி போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
ரயில்வே பாலம்.—போ (Po) நதியின் குறுக்கே.
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (44 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-வீவாக் (Wewak) பிரதேசம்.
ஜப்பானியக் கப்பல்கள்.—லெயிடி (Leyte).
ஜப்பானியக் கப்பல்கள்.— ஆர்மாக் (Ormoc) வளைகுடா. பிலிப்பைன்ஸிலுள்ள லெயிடி (Leyte).
இலக்குகள்.—பாங்காங்-சிங்மாய் (Bangkok-Chiengmai) ரயில்வே.

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—இலக்குகள்.-சிண்டுவின் (Chindwin).

ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மெர்கை (Mergui) துறைமுகம்.

17—11—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—துருப்புகள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—போக்குவரத்துகள்.—கெல்லென்கிர்ச்சன் (Geilenkirchen).

பலத்த முனைகள்.—சுரங்க பட்டாளிகள் பீரங்கள்.—ஆக்கன் (Aachen).

பட்டணங்கள்.—டூரன் (Duren), ஜூலிச் (Julich), ஹெய்ன்ஸ்பர்க் (Heinsberg).

ரயில்வே இலக்குகள்.—கோலனிற்குச் சமீபம் (Cologne).

போக்குவரத்து இலக்குகள்.—வட இதாலி (N. Italy).

இலக்குகள்.—தென் ஜெர்மனி (S. Germany), ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary), யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—ஜெர்மன் கப்பற் கூட்டம்.—நார்வே (Norway).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய கடற்படை தளம்.—புருனி (Bruni) வளைகுடா.

ஜப்பானியக் கப்பல்கள்.—ஸாண்டாகான் (Sandakan), டாரிகான் (Tarakan).

ஜப்பானியக் கப்பல்கள், படகுகள்.—மகாஸர் (Macassar).

பர்மா (Burma).

4 பாலங்கள்.—கலிவா (Kalewa).

விமானச் சண்டைகள்.—அனிஸகான் (Anisakan), நாங்கியோ (Nawnghkio)

சேமிப்புகள் கூட்டங்கள்.-ஷிபா, (Hsipaw), ஸெடா (Sedaw).

18—11—44 (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில் போக்குவரத்து ஸ்தலங்கள்.—மன்ஸ்டர் (Munster).

எண்ணெய் சேமிப்புகள், துவியல்கள், விமான நிலயங்கள், இதர ராணுவ இலக்குகள்.—மியூனிச், (Munich) உல்ம் (Ulm).

விமான நிலயங்கள்.—மியூனிச், (Munich), லெய்பெய்ம், (Leipheim) ஆக்ஸ்பர்க் (Augsburg), மென்கென் (Mengan).

ராணுவ இலக்குகள்.–ஆஸ்திரியாவிலுள்ள வியென்னு (Vienna).

ரயில்வே தளங்கள்.—யூகோஸ்லாவியாவிலுள்ள மாரிபார் (Maribor).

இலக்குகள்.—ஸைலீஷியா (Silesia) மேற்கு ஹங்கேரி (W. Hungary).

ஜெர்மன் போக்குவரத்துகள்.—வடக்கு இதாலி (N. Italy).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.—(19 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—வானி இக்கல் (Wanne Eickel).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

மின்சார நிலயம்.—கெய்த்தின் (Kyaikthin), பிந்தா (Pyintha).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—கட்டடங்கள்.—ஹுஸன் ஹாஸி (Hsun Hasi).

ராணுவ நிலயங்கள் ஸ்டோர்ஸ்.—கன்பாலு (Kanbalu).

தொழிற்சாலைகள் படகுகள்.—பெகு (Pegn). மார்ட்டாபன் (Martaban).

ரயில்வேப் பாலம்.—மித்தா (Meittha).

மோட்டார் வண்டிகள்.—காலிவா (Kalewa) வுக்குப் போகும் ரஸ்தா.

தொழிற் சாலைகள்.—டன்போ (Tonbo).

எதிரி முனைகள்.—மித்தா (Myittha). சமவெளி.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

13—11—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து, லண்டன் (London).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள் தரைமீதுள்ள ஸ்தாபனங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள லெய்டி (Leyte). (9 எதிரிவிமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

14—11—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain.)

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

ருஷ்யா (Russia).

தூரக்குழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

15—11—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**
நேசதேச சைனியங்கள்.—பிலிப்பைன்ஸி தீவுகள் லெயிடி (Leyte).

**16—11—44.** (வியாழக்கிழமை)
**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**17—11—44.** (வெள்ளிக்கிழமை).
**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).**

**18—11—44.** (சனிக்கிழமை).
**பிரிடன் (Britain),**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**19—11—44** (ஞாயிற்றுக்கிழமை).
**பிரிடன் (Britain).**
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

## யுத்தக் குறிப்புகள்.

**மேற்குப் போர்முனை.** ஜெர்மனிக்குள் நுழைய ஏழு நேசதேசப் படைகள் முயற்சி செய்து வருகின்றன. நான்கு சேனைகள் எல்லைச் சரகத்தைக் கடந்து ஜெர்மனியில் போரை நடத்தி வருகின்றன. வடக்குக் கடலிலிருந்து ஸ்விட்ஸர்லாந்து வரையிலுள்ள இந்தப் போர்முனையில் கெட்ட பருவ காலத்திலும், முழங்கால் வரையிலுமுள்ள சகதியிலும், இடுப்பளவு தண்ணீரிலும், ரைன்லாந்துடையவும், லோரேனுடையவும், சதுப்பு நிலங்களிலும் போர் நடைபெறுகிறது. நேசதேசப் படைகள் சர்பராக்களைக் குவித்து வந்த அவகாசத்தில் பிரான்ஸிலிருந்தும், பெல்ஜியத்திலிருந்தும் பின்வாங்கிய படைகளை எதிரி திருத்தி அமைத்துவிட்டான். தற்காப்புகளை பலப்படுத்திவிட்டான். இடத்தை விட்டுக்கொடுத்து காலஹரணம் செய்து சாகும் வரையில் கடும் போரை நடத்துவதென்று எதிரி உத்தேசித்திருக்கிறான். இந்த லக்ஷியத்துடன் அவனுடைய S. S. படைகள் அதிக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன.

பிரான்ஸையும், பெல்ஜியத்தையும் விடுவித்த நடவடிக்கைகளைப்போல அவ்வளவு பகட்டாக இல்லாவிட்டாலும் இந்த நடவடிக்கைகளிலும் சிறந்த பலன்கள் கிடைத்திருக்கின்றன. ஷெல்ட் நதிப் பிரதேசம், வால்செரின் தீவு பெர்கன்-ஓப்-சூம் முதலிய பிராந்தியங்கள் சுத்தி செய்யப்பட்டுவிட்டன. அதன் பயனாக ஆண்ட்வெர்ப் துறைமுகத்தின் வழியாக ஏராளமான சர்பராக்கள் தாராளமாக வரக்கூடும்.

வடக்கு ஹாலந்தில் நேசதேசத்தாரின் விலாப் பக்கமும் சுத்தி செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கை முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானது. கிழக்குப் போர்முனைக்கு கிழக்குப் பிரஷ்யா முக்கியத்துவமுள்ளதுபோல மேற்குப் போர்முனைக்கு வடக்கு ஹாலந்து முக்கியத்துவமுள்ளது. 1914-ல் ருஷ்யர்களுக்கு மாசூரியன் ஏரிகளில் ஏற்பட்ட தோல்வி மறுபடியும் ஏற்படாமலிருக்க வேண்டுமானால் எதிரி வசமுள்ள கிழக்கு, மேற்கு பார்ச்வங்கள் எதிரிகளில்லாமல் சுத்திசெய்யப்படவேண்டும். மேற்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள் வடக்கு ஹாலந்தில், பிரிடிஷ், அமெரிக்கப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்துவிடலாமென்ற வீண் எண்ணத்துடன் உறுதியுடன் போர் புரிந்து வருகிறார்கள்.

இந்தப் போர் முனையில் நேசதேசத்தார்கள், ருஷ்யர்களின் யுத்த தந்திரத்தைக் கையாண்டு வருகிறார்கள். அதாவது எதிரிக்கு பிரமை ஏற்படும்படியாக பல ஸ்தானங்களைத் தாக்கி, இறுதியாக எதிரிக்கு மிகவும் பலஹீனமான இடத்தில் பலமாகத் தாக்குவது. இதற்காக ஏழு சேனைகளில் ஆறு சேனைகள் ஜெர்மன் எல்லைச் சரகத்திலும், அல்லது அதற்குக்குள்ளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றொன்று கனடிய 1-வது சேனை ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் மார்க்கத்தையும், நேசதேசத்தாரின் இடது விலாப் பக்கத்தையும் காப்பாற்றி வருகிறது. ஆறு சேனையில் நான்கு சேனைகள் ஜெர்மன் பூமியில் சென்று போர் புரிந்து வருகின்றன. வடக்குக் கோடியில் ஜெனரல் டெம்ப்ஸிடமுள்ள பிரிடிஷ் 2-வது சேனை எண்டோவனுக்குக் கிழக்கில் மாஸ் நதியை நோக்கி எதிரிகளைத் துரத்தி வருகிறது. அது டச்சு மாகாணமான லிம்பர்க்கிலிருந்து புறப்பட்டு ஜெர்மனிக்குள் பிரவேசித்து விட்டது. ஜெனரல் ஸிம்ஸனிடமுள்ள அமெரிக்க 9-வது சேனை, ஆக்கனுக்குத் தெற்கிலும் வடக்கிலும் தாக்கி வருகிறது. ஹாட்ஜிடமுள்ள அமெரிக்க 1-வது சேனை ஆக்கனுக்குத் தெற்கிலும், கிழக்கிலும் தாக்கி வருகிறது. அதற்குத் தெற்கில் லோரேனிலுள்ள மெட்ஸி-நான்ஸி பிரதேசத்தில் ஜெனரல் பாட்டனிடமுள்ள அமெரிக்க 3-வது சேனை ஸாரை நோக்கி முன்னேறி

வருகிறது. ஜெனரல் பாச்சுடமுள்ள அமெரிக்க 7-வது சேனை வாஸ்கஸ் வழியாகத் தாக்கி வருகிறது. தெற்குக் கோடியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரெஞ்சுப் படை பெல்போர்ட் இடைவெளி வழியாகப் போர் புரிந்து வருகிறது.

முக்கியமான லாபங்கள் கிடைத்து விட்டன. பிரிடிஷ் 2-வது படை கிலன்கெர்சனைப் பிடித்தது. அமெரிக்க 9-வது படை ரோயர் நதியை அடைந்தது. அமெரிக்க 1-வது சேனை ரேனை நோக்கி முன்னேறுகிறது. அமெரிக்க 3-வது சேனை தியொன்வில்லி பிராந்தியத்தில் எல்லைச் சரகத்தைத் தாண்டிவிட்டது. மெட்ஸ் கோட்டையைப் பிடித்துவிட்டது. அமெரிக்க 7-வது சேனையும், 3-வது சேனையும் ஜெர்மனிக்குள் 11 மைல்கள் நீளமுள்ள போர்முனையில் ஈடுபட்டிருக்கின்றன. பிரெஞ்சுப் படை மல்ஹௌஸி என்ற ஆல்ஸாஸ் மாகாண நகரத்தைப் பிடித்தது. ஸ்டிராஸ்பர்க்குக்குள் நுழைந்துவிட்டது.

இவைகள் முக்கியமானதாக இருந்தபோதிலும் ஜெர்மனிக்குள் ஊடுருவிச் சென்றதாகச் சொல்லிவிட முடியாது. ஸாஸ் அநேகமாக விடுதலை செய்யப்பட்டது. ஜெர்மனியின் வாஸ்தவமான தற்காப்புகள் என்று சொல்லப்பட்ட மேற்கு அரணிலிருந்து நேசதேசப் படைகள் தூரத்திலிருக்கின்றன. இந்தத் தற்காப்புகள் ஸிக்பிரட் அரணிலோ அல்லது ரைன் நதியிலோ இருக்கலாம். ஊடுறுவிச் செல்லும் தருணம் இன்னும் வந்துவிடவில்லை.

ஆனால் ஒன்று நிச்சயம். மகத்தான தாக்குதலை ஆரம்பிக்கும்பொழுது நேசதேசப் படைத் தலைவர்கள்தான் எந்த இடத்தில் முடிவான போரை நடத்துவதென்று முடிவு செய்வார்கள். ஜெர்மானியர்கள் முன்கூட்டி இதைச் செய்யமாட்டார்கள். இதே சமயத்தில் போர் முனை பூராவிலும் நேசதேசத்தார்கள் தாக்கி வருவதால் ஜெர்மன் படைகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அதன் வலு குறைந்துவிடுகிறது. மூல பலம் அற்றுப் போய்விடுகிறது. இறுதித் தாக்குதல் எங்கு ஏற்படுமென்பது ஜாக்கிரதையாக ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. இடத்தை விட்டுக்கொடுத்து காலஹரணம் செய்வதென்ற ஜெர்மன் தந்திரம் நீடித்திருக்காது. எதிரி மூலையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டான். இனிமேல் அவன் தேசங்களை இழப்பதென்றால் தொழிற்சாலை பிரதேசங்களான ரூர் பிரதேசங்களையும், ரைன்லாந்தையும்தான் பலி கொடுக்கவேண்டும்.

வி வி வி வி வி

**ஹிட்லர்.**

ஹிட்லருக்கு என்ன நேர்ந்ததென்று புரியவில்லை. அவனுக்கு ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறதென்பது நிச்சயம். சிலர் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், வியாதி ஏற்பட்டிருக்கிறதென்றும், அவன் இறந்துவிட்டானென்றும் சொல்லுகிறார்கள். ஹிம்லர் சமீப காலத்தில் வெளியிட்ட அறிக்கைகள் ஹிட்லரின் மரணத்தைக் குறிப்பிடுகின்றன. நாஸி பிரமுகர் சமீபகாலத்தில் பின்வருமாறு சொன்னார். "ஹிட்லரை நாம் ஞாபகத்தில் வைத்திருப்பது நமது புனிதமான கடமையாகும். நமது இறந்த சிநேகிதர்களை ஞாபகப்படுத்திக் கொள்ளும் சமயத்தில் நம்முடைய ஹிட்லருடனும் நாம் வழிபடவேண்டும்."

சிலநாட்களுக்குமுன் பார்மானுக்குப் பதிலாக ஹிம்லர் டெபுடி பூரராக நியமிக்கப்பட்டார். ஹிட்லரின் பதவிக்கு அடுத்த வார்சாகவும் நியமிக்கப்பட்டுவிட்டார். பெர்லினிலுள்ள காரியாலயத்தில் நாஸிக் கட்சியின் தலைவர்கள் கூட்டத்தில் இந்த நியமனம் வெளியிடப்பட்டது. ஆச்சரியப்படத்தக்க முறையில் இந்த வெளியீட்டை ஹிட்லர் நேர்முகமாக வெளியிடவில்லை. அவனுடைய அறிக்கையை நாஸிக் கட்சியின் தலைவர் மூலமாக அனுப்பினான். பின்துறையில் அநேக விஷயங்கள் இருக்கின்றனவென்று தோன்றுகிறது. ஹிட்லர் உயிருடனிருந்தாலும் சரி, அவன் அவனுடைய செல்வாக்கை இழந்துவிட்டான். அவன் அதாவது இறந்திருந்தால் நாஸித்வத்துக்கு சாவு மணி அடித்தாகிவிட்டது.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.**

வடக்குக் கோடியின் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் விமானப்படை டிர்பிட்ஸை மூழ்கடித்து விட்டது. அது மறைந்து விட்டதாலும், ருஷ்யர்கள் பால்டிக்கில் மீன் வெடிகள் மூலம் தாக்கிவருவதாலும், வடக்கு நார்வேயில் ஜெர்மனியின் நிலைமை மோசமாகி வருகிறது. தெற்குக் கோடியில் ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டு தாக்கப்பட்டு வருகிறது. அதன் வீழ்ச்சி கூடிய சீக்கிரம் நடைபெறும்.

வி வி வி வி வி

**இதாலியில் நடவடிக்கை.**

இங்கு பருவகாலத்தினாலும், நேசதேசப்படைகளின் ஒரு பாகம் வேறு இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டதாலும் முன்னேற்றம் மெதுவாகத்தான் நடைபெறக்கூடும். ஆகிலும் 8-வது சேனை உறுதியுடன் ராவென்னாவையும், போலோனாவையும் நோக்கி முன்னேறிவருகிறது.

**பால்கன் நாடுகள்.** மாசிடோனியாவின் தலைநகரமான ஸ்கோபிஞ்ஜியும், ஆல்பெனியாவின் தலை நகரமான டிரானாவும் விழுந்து விட்டன.

கிரீஸைப் புனருத்தாரணம் செய்ய இந்தியத்துருப்புகள் கிரீஸுக்கு வந்துவிட்டன.

பால்கன் நாடுகளில் அமைதி ஏற்பட சிறிது காலமாகும். விடுதலை மூலம் ராஜீய ஸ்வதந்திரமும் ராஜீய சூழ்ச்சிகளும் தோன்றிவிட்டன. ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, கிரீஸிலுள்ள ராஜீய கோட்பாடுகள் தலையெடுத்து விட்டன.

நான்கு வருஷங்களாக அண்டொனஸ்குவின் யதேச்சாதிகாரத்துக்குட்பட்டிருந்த ருமேனியாவில் கட்சி விவகாரங்கள் தலையெடுத்து விட்டன. புகாரெஸ்டில் புதிய கக்ஷிகள் தோன்றிவிட்டன. நாடு பூராவும் ராஜீயத்தில் கவனம் செலுத்திவருகிறது. பால்கன் நாடுகள் பச்சாத்தாபப்படும் பல்கேரியா பால்கன் நாடுகளில் ஒற்றுமையை ஏற்படுத்த பலமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. அது டிடோவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டது. அது கிரீஸுக்கு இழைத்த திங்குகளுக்குப் பரிஹாரம் செய்யத் தயாராக இருக்கிறது. நாஸிகளால் அழிக்கப்பட்ட கிரீஸுக்கு உணவுப் பொருள்தான் முதல்தேவை. அதன் ராஜீயம் பின்பு கவனிக்கப்படலாம்.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸில் லெயிடித்தீவில்.** ஆர்மாக்குக்கான போர் நடைபெற்று வருகிறது.

வி வி வி வி வி

**ஜப்பானியரின் அக்கிரமம்.** பர்மாவிலும், சியாமிலும், மலேயாவிலும், கிழக்கு இந்தியத் தீவிலும் ஜப்பானியர் வசமுள்ள பிரிடிஷ், ஆஸ்திரேலியயுத்தக் கைதிகளின் கோரமான நிலைமையைப்பற்றி, நவம்பர் 17-ம் தேதியன்று பிரிடனில்பிரதிநிதி சபையில் யுத்த மந்திரியான ஸர் ஜேம்ஸ் கிரிக் பின்கண்ட குறிப்பை வெளியிட்டார்.

“சிங்கப்பூரிலிருந்து ஜப்பானுக்குச் சென்ற ஜப்பானியக் கப்பலிலிருந்த பிரிடிஷ், ஆஸ்திரேலிய யுத்தக் கைதிகளில், கப்பல் மூழ்கியபொழுது தப்பிப் பிழைத்த 150 பேர்கள் இந்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களை விஜாரணை செய்ததில் கிடைத்த முதல் தகவல்களிலிருந்து தூரக்கிழக்கின் தெற்கு பிராந்தியங்களில் அவர்கள் எவ்விதம் நடத்தப்பட்டார்கள் என்பதற்கு முதல் தரமான சாக்ஷியம் கிடைத்திருக்கிறது. பர்மா, சியாம், மலேயா, கிழக்கிந்திய தீவுகளிலுள்ள நேசதேச யுத்தக் கைதிகளை ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் எவ்விதம் நடத்திவந்தார்களென்பதைப்பற்றி நிச்சயமான தகவல்கள் கிடைத்துவிட்டன.

சிங்கப்பூரிலும், ஜாவாவிலும் இருந்த கைதிகளில் பெரும்பான்மையோர் 1942-ம் வருஷ ஆரம்பத்தில் பர்மாவுக்கும், சியாமுக்கும் கொண்டு போகப்பட்டார்கள். ஆஸ்திரேலியர்கள் கப்பல்களின் அடித்தட்டுகளில் அடைக்கப்பட்டு பர்மாவுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அறைகள் பரப்பு மட்டத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக, தடுக்கப்பட்டிருந்தன. உச்சி மட்டம் நான்கு அடிக்கு மேல் உயரமாக இல்லை. பிரிடிஷ் கைதிகள் இருப்புப்பாதை மார்க்கமாக ஸியாமுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். வண்டிகளில் அவர்களுக்குப் படுக்கக்கூட இடமில்லை. அதன் பிறகு அவர்கள் 80 மைல்கள் வரையில் நடத்திச் செல்லப்பட்டார்கள். பர்மாவிலும், ஸியாமிலும் நடைபெற்ற இந்த நடவடிக்கைகள் கால் நடையாகவும், தூரத்தை கவனிக்காமலும், கெட்ட கால நிலைமையிலும் கைதிகளின் தேக அசௌக்கியத்தையும் பொருட்படுத்தாமல் நடைபெற்றன. பிரிடிஷ் கைதிகள் கரடுமுரடான தொத்து வியாதி உள்ள காடுகள் வழியாக இருப்புப்பாதையை அமைக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அந்த இருப்புப்பாதை ஸியாமுக்கும், பர்மாவுக்கும் நடுவிலுள்ள மலைகள் வழியாகச் சென்றது. பர்மாவிலுள்ள இருப்புப்பாதையை அமைக்கும்படி ஆஸ்திரேலியர்கள் ஏவப்பட்டிருந்தார்கள்.

வி வி வி வி வி

**கோரமான நிலைமை.** இந்த யுத்தக் கைதிகள் மிகவும் கோரமான நிலைமையில் வசித்து வேலை செய்து வந்தார்கள். இந்த சிரமங்களை உள்நாட்டு வாசிகளும் கூட பொறுத்திருக்க முடியாது. உள்நாட்டுக்காரர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். அளிக்கப்பட்ட வாசஸ்தல வசதிகள் உஷ்ணந்த ரேகையின் பெரும் மழையிலிருந்தும், தகிக்கக்கூடிய சூர்ய வெப்பத்தினின்றும் அவர்களைக் காப்பாற்றக் கூடியதில்லை. கிழிந்து போன ஆடைகளுக்குப் பர்த்தியாக புதிய ஆடைகள் கொடுக்கப்படவில்லை. சிலருக்கு ஆடைகளும், ஜோடுகளும், தொப்பியும் ஸப்ளை சப்ளை செய்யப்படவில்லை. ஒரு நாளைக்கு மூன்று தடவை அரிசிச்சோறும் அறை அல்லது ஒன்று பைண்ட் உள்ள

குழம்பும் ஆகாரமாக வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் வேலையை ஓய்வன்னியில் நடத்தி வரவேண்டும். அதன் பயனாக ஏராளமான கைதிகள் இறந்து விட்டார்கள். ஐந்தில் ஒருவர் இறந்தார் என்று சொல்ல வேண்டும்.

1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இருப்புப்பாதை அமைப்பு வேலை முடிவடைந்தது. அதன் பராமரிப்புக்குத் தேவையானவர்கள் போக பாக்கிப் பேர்கள் காட்டைத் தாண்டி உள்ள ஸியாமிய முகாம்களுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். இங்கு நிலைமை சிறிது சகிக்கக்கூடியதாக இருந்தது. இந்த முகாம்களிலிருந்து திடகாத்திரமுள்ளவர்கள் சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார்கள்.

தப்பி வந்திருப்பவர்கள் 1944-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் சிங்கப்பூரை விட்டுப் புறப்பட்ட கப்பலில் இருந்தவர்கள். அந்தக் கப்பலில் 1,300, பிரிடிஷ் ஆஸ்திரேலிய யுத்தக் கைதிகளிருந்திருக்கலாம்.

கப்பல் மூழ்கிய பின் ஜப்பானியர்கள் தண்ணீரில் தவித்துக்கொண்டிருந்தவர்களில் ஜப்பானியர்களை மட்டும் காப்பாற்றி விட்டார்கள். கைதிகள் கவனிக்கப்படவில்லை. அவர்களில் பெரும்பான்மையோர் தண்ணீரில் மூழ்கி இறந்தார்கள். நாம் ரக்ஷணையளிக்கும் அதிகாரிகளை பலமாக ஆக்ஷேபனை செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

---

## ஹிட்லரின் ரைன் நதித் தற்காப்புகள்

(*F. O.* மிக்ஷி).

மேற்கு முனையில் நேசதேசத்தாரின் முன்னேற்றத்தைத் தடுக்க ஜெர்மனிக்கு எவ்வித இயல்பு இருந்தபோதிலும், நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்தால் அதற்கு முக்கியமான தற்காப்புகள் ரைன் நதிக்கரையில்தானிருக்கின்றனவென்பது நிச்சயம். இந்த அகலமான நதி ஸ்விட்ஸர்லாந்தின் எல்லைச்சரகத்திலிருந்து ஹாலந்திலுள்ள அதன் சங்கமப் பிரதேசம் வரையிலும் ஜெர்மனிக்குள் பிரவேசிக்கமுடியாமல் தடை செய்கிறது. அதற்கு முன் பக்கத்தில் வாஸ்கஸ், ஹன்ஸரக், எயிபெல் என்ற மலைகள், மொஸல், மயூஸ் என்ற நதிகள் இடையூறாக இருக்கின்றன. வடக்குப்பக்கத்தில் இந்த சிரம சாத்தியமான பிரதேசத்தில் ஸிக்பிரட் அரண் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் நதியின் மேற்குப் பக்கத்திலுள்ள படைகளைக் காப்பாற்றவேண்டுமானால் நேசதேசத்தார்கள் முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாக நடத்தி வரவேண்டும். அப்பொழுது ஜெர்மனியின் நிலைமை மோசமாகிவிடும். எல்லாம் சேர்ந்து ரைன் நதியின் குறுக்கே 25 பாலங்கள் இருக்கின்றன. இவைகளை ஆகாயத்திலிருந்து சுலபமாகத் தாக்கிவிடலாம். ரைன்நதிற்குத் தெற்கிலுள்ள ஏழாவது ஜெர்மன்படை அகப்பட்டுக் கொண்டதுபோல் இங்கிருக்கும் ஜெர்மன்படைகளுக்கும் சங்கடம் ஏற்பட்டுவிடும்.

நவீனத் தேவைகளை ஒத்து ஸிக்பிரட் அரண் அமைக்கப்பட்டிருக்கிறதா, அல்லது டாங்கிகள், கடுமையான பீரங்கிகள், விமானங்கள், குண்டுகள், முதலியவற்றின் ஒன்றுபட்ட தாக்குதலைச் சமாளிக்கப் போதுமான பலத்துடன் அமைப்பட்டிருக்கிறதாவென்பதும் யுத்ததந்திரத்திலிருந்து அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் ஜெர்மானியர்கள் ரைன் நதிக் கரையில்தான் கடைசியாக எதிர்த்துப்போராட முடியும். அங்குதான் அவர்களுக்குப் பின்புறத்தில் கருங்காடு, ஓடன்வெல்ட், டானஸ் மலைகள் என்ற இயற்கையான சாதகங்களிருக்கின்றன. அவை வினா அநேக தற்காப்பு ஸ்தானங்களிருக்கின்றன.

அவைகளில் நவீன முறையில் அமைக்கப்பட்டதும், மிகவும் வலிமையுள்ளதுமானதும் தெற்கில் பாஸிலுக்கு சமீபத்திலும் பார்குண்டியன் வாசற்படியைக் காவந்து செய்து கொண்டிருப்பதுமான இஸ்டீனர் குலோட்ஸ் என்பது. அதில் ரைன்நதி சமவெளியை நோக்கியுள்ள ஒரு உன்னதமான மலை இருக்கிறது. அதில் சுரங்க வெடிகளும், கடுமையான பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கருங்காட்டில் அடர்த்தியான காடுகளுள்ள மலைகள் செங்குத்தாக 4,500 அடி உயரத்துக்குக் காணப்படுகின்றன. இவையெல்லாம் சேர்ந்து ஒருபெரிய இடையூறாக இருக்கும். அது தெற்கிலிருந்து ரைன்நதி வழியாக வடக்கே முன்னேறுவதை நன்றாய்த்தடுத்துவிடும். மற்ற தற்காப்பு நிலயங்கள் ராஸ்டாட், மெனஸ், காட்லென்ஸ், வெசல், பெலும். அவைகளுக்குப்பின்புறமுள்ள 3,000 அடி உயரமுள்ள மலை உச்சிகளை ஜெர்மானியர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் வடக்கில் விலாப்பக்கமாகச் செல்ல உத்தேசித்தால் அங்கு நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. கடக்க முடியாத அநேகக் கால்வாய்களுள்ள ரைன்நதி ஜெர்மானியர்களுக்கு இயற்கையான தற்காப்பாக இருக்குமென்று முதலில் தோன்றிற்று. ஆகிலும் காலதாமதம் செய்யக்கூடிய முட்டுக்கட்டைகளை சில சந்தர்ப்பங்களில் துரிதமாகத்தாண்டிவிடலாமென்று நவீன யுத்த தந்திரம் வெளிப்படுத்திவிட்டது.

ரைன் நதி தற்காப்பை விலாப்பக்கத்தில் கடந்து சென்று வடக்கு ஜெர்மன் சமவெளியில் வெஸர், ப்ரெமன், ஹாம்பர்க், ஹானோவர் முதலிய இடங்களை நோக்கி நேசதேசப்படைமுன் னேற வேண்டுமானால், அவைகள் ஜுட், எம்ஸ் மற்ற கால்வாய்களைத்தாண்ட வேண்டியதுடன் விரிவான கஷ்டசாத்தியமான, சதுப்பு நிலமான போர்லாங்கஸ் பிரதேசத்தையும் மற்ற அகழ் களையும் தாண்டிச் செல்ல வேண்டும். அவைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்த ஜெர்மனி தயார் செய்திருக்கக்கூடும். எச்நிலைமையிலும், ரைன் நதிக்குச் சிறிது தூரம் பின்புறத்தில் வீஸர் நதியை ஒட்டியும் மெயின் நதியின் குறுக்கே ஆஷாடன்பர்க்கு சமீபத்திலிருந்து நெக்கர் வரையிலும் ஜெர்மனி தற்காப்பு அரணை அமைத்து வருகிறதென்று கிடைத்துவரும் சமீபத் தகவல்கள் ஸ்வாரஸ்யமுள்ளவை.

இது எவ்வளவு கஷ்டசாத்தியமாகத்தோன்றினாலும் ரைன்நதி பிரதேசமாயிருந்தாலும்சரி, அதற்குக் கிழக்கிலிருந்தாலும் சரி, ஒவ்வொரு போர் முனையும் 500 மைல்கள் நீளமுள்ளது. அவைகளைத் தற்காப்பு செய்ய ஏராளமான படைகள் தேவைப்படும். நெக்கர் பள்ளத்தாக்கு, மெயின் நதிக்கரையில் நெபோலியன் படையெடுப்புக்கு உபயோகப்படுத்திய மார்க்கம், அல்லது அதற்கு வடக்கிலுள்ள குறைவான ரக்ஷணையுள்ள பகுதி போன்ற வழிகளைப் பலமாகத் தற்காப்பு செய்வதற்காக படைகளை உபயோகிப்பதென்றும், மற்ற இடங்களிலுள்ள காடுகள், மலைகளின் உதவியை நம்புவதென்றும் ஜெர்மனி உத்தேசிக்கிறது. ஆகிலும் ஜெர் மன் படைகள் நேசதேசத்தாரின் அதிகபலமுள்ள படைகளை எதிர்த்துப்போர் புரியமுடியாது.

---

## ஹிம்லருக்கு டாக்டர் பட்டம்.

### டீனின் சங்கடம்.

(விக்டர் ஷிப்)

1-வது நம்பர் நாஸியாக ஆகிவிட்ட ஹென்ரிக் ஹிம்லரைப்பற்றி ஜெர்மனியில் ஒரு வேடிக்கையான சல்லாபம் சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஹிம்லர் ஒரு காலத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தார்.

பெர்லின் சர்வகலாசாலையின் டீனைக்கூப்பிட்டு டாக்டர் கோயபல்ஸ் பின்வருமாறு சொன்னான் "ஆசிரியரே, ரெக்பூரர் S. S. ஹிம்லரின் சேவை இப்பொழுது ஜெர்மனிக்கு அத்தியாவசியமானது. ஒரு சங்கடம் மட்டுமிருக்கிறது. அவர் நம்முடைய படிப்பாளர் களிடையே அதிகச் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. படிப்பாளர்களிடம் அவர் அதிக மான அதிகாரம் செலுத்துவதற்கு வழிகளைத் தேடவேண்டும். பெர்லின் சர்வகலாசாலை யின் ஹானரரி டாக்டர் என்ற பட்டத்தை அவருக்கு வழங்கிவிடலாமா" டீன் தலையைச் சுரண்டிக்கொண்டே பதிலுரைத்தார் "சரி, ஜெர்மனிக்காக என்றால் நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆகிலும் அவர் ஆசிரியர்கள் அடங்கிய கமிட்டியின்முன் ஆஜராகி இரண்டொரு கேள்விகளுக்குப் பதிலுரைக்கவேண்டும். இது ஒரு வெளிப்படையான சடங்கு."

அவ்விதமாகவே ஹிம்லர் சர்வகலாசாலைக்குச் சென்றபொழுது அவரை டீன் தலைமை கொண்ட ஆசிரியர்கள் கமிட்டி கண்யமாக வரவேற்புச் செய்தது. அப்பொழுது விடுக்கப் பட்ட கேள்விக்கு வாலன்ஸ்டீனைப் பற்றி ஹிம்லர் எழுதியிருக்கும் நாடகத்தைப்படித்த எந்த ஜெர்மன் பள்ளிப்பிள்ளையும் சுலபமாக பதிலுரைத்திருக்கும். வாலன்ஸ்டின் என்பவர் 300 வருஷங்களுக்குமுன் நடைபெற்ற 30 வருட யுத்தத்தை நடத்தியவர். அவர் ஆஸ்திரிய மன்னரை எதிர்த்துக் கலகம் செய்தார். அவருடைய தலைமைக் காரியாலயத்திலிருந்த ஜெனரல்களே கலகம் செய்து அவரைக் கொலைசெய்தார்கள்.

"வாலன்ஸ்டினைக் கொலை செய்தது யார்?" என்று ஹிம்லரை டீன் கேட்டார்.

ஹிம்லர் மூஞ்சியை சுளுக்கிக்கொண்டு, தீர்க்கமாக ஆலோசித்து கடைசியாகப் பின் வருமாறு பதிலளித்தார். "ஆசிரியரே, எனக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமில்லையென்று உறுதிகூறுகிறேன். நான் இப்பொழுது சொல்லக்கூடிய மட்டில் என்னுடைய ஜனங்களும் அதில் சம்பந்தப்படவில்லை."

டீன் மனவருத்தத்துடன் அவருக்கு வந்தனோபசாரம் சொல்லிவிட்டு, ஹெர்மான் கோயரிங்கிடம் சென்று பின்வருமாறு சொன்னார் "ஜெர்மன் மார்ஷலே, என்னால் இயன்றதைச் செய்ய நான் தயாராக இருந்தேன். ஆகிலும் வாலன்ஸ்டினைக் கொலை செய்ததில் அவருக்கு யாதொரு சம்பந்தமும் இல்லையென்று சொன்ன ஒருவருக்கு ஹானரரி டாக்டர் என்ற பட்டத்தை எவ்விதம் வழங்குவது."

கோயரிங் அழுத்தமாகப் பதிலுரைத்தார் "அவர் அவ்விதம் உறுதி கூறியிருந்தால் நீங்கள் அதை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அவர் அவருடைய பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஒருபொழுதும் தயங்குவதில்லை."

டீனுக்கு மேலும் வருத்தம் உண்டாயிற்று, 'ஹிட்லரைப் பேட்டிகண்டு அவருடைய ஆலோசனையைப்பெற அவர் அனுமதி பெற்ருர். ஹிட்லர் ஜாக்கிரதையுடன் டீனின் விருத்தாந்தத்தைக் கேட்டுவிட்டு பின்வருமாறு முடிவு செய்தான்." சரி, அதைப்பற்றி என்ன சர்ச்சை. அந்த தூதரை அவன் கொன்றிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அதைப்பற்றி என்ன கவலை".

---

## பிரிடனின் விரிவான கடலாதிக்கம்.

### வால்செர்ன் தீவில் படைகளிறங்கிய தீரம்.

(பிரியான் டன்ஸ்டால்).

வால்செர்ன் தீவில், பிரிடிஷ் கடற்படையின் ரக்ஷணைகொண்ட கடற்படை படையெடுப்புப் படகுகளின்மூலம் பிரிடிஷ் காலாட்படையும், பிரிடிஷ் மாரீன் கமாண்டோப் படைகளும் இறங்கியது யுத்தத்தில் மிகவும் அற்புதமான நடவடிக்கையாகும். இந்தப் படையெடுப்பின் லக்ஷியம் அந்தத் தீவிலுள்ள எதிரியின் பீரங்கி அமைப்புகளை அழிப்பதுதான். அந்த பலத்தைக்கொண்டுதான் ஜெர்மானியர்கள் இதுவரையில் ஷெல்ட் நதியிலுள்ள வழியை அடைத்துவிடவும், அதன்மூலம் ஆன்ட்வெர்ப் துறைமுகத்தை நேசதேசத்தார்கள் உபயோகப்படுத்தமுடியாமலும் செய்துவந்தார்கள். எட்டு வாரங்களுக்கு மேலாக ஆன்ட்வெர்ப் நேசதேச வசமிருந்து வந்தபோதிலும் வால்செர்னில் ஜெர்மனியில் எதிர்ப்பு மிகவும் பலமாகவே இருந்து வந்தது. பிரிடிஷ் விமானப்படையும் பலமாகத் தாக்கிவந்தது. தெற்கு பெவிலாந்திலிருந்து செல்லும் நடைபாதையை கனடியப் படைகள் தாக்கிவந்தன. அப்படியிருந்தும் தாக்குதலின் வலுக்குறையவில்லை.

கப்பல்களின் வருஷாந்திர நடமாட்ட அளவை யோஜிக்கும்பொழுது ஆன்ட்வெர்ப் உலகத்திலேயே இரண்டாவது துறைமுகமாகும். மேற்கு முனையில் போரை துரிதமாக நடத்த அதன் உபயோகம் மெத்த அவசியமாகும். ஜெர்மானியர்கள் இதை நன்கு அறிவார்கள். நேசதேச விமானத்தாக்குதல் மூலம் அதன் அணைகள் உடைபட்டு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதினுல் படையெடுப்புப் படகுகள் தண்ணீரில் அறுகுறையாக மூழ்கின. வீடுகளின் மத்தியிலும், மரங்கள் மத்தியிலும் செல்ல சாதகம் ஏற்பட்டது. இவ்விதமிருந்தும் ஜெர்மானியர்கள் தற்காப்புப் போருக்கு லாயக்குள்ள கேந்திரஸ்தானங்களை நன்ருய் உபயோகிக்க முடிந்தது. படைகளிறங்கு முன்னும் இறங்கிய பின்னும் பிரிடிஷ் படைகளுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதத்தையும், சகதி, மணல், குன்றுகள், அணைகள், கால்வாய்கள் மூலம் அமைக்கப்பட்ட தற்காப்புகளை சமாளிக்கவேண்டிய சிரமங்களையும்,கவனிக்கும்பொழுதுதான் பிரிடிஷ் கடற்படை, தரைப்படைகளின் சிரமங்களையும், சேவைகளையும் நாம் மதித்துப்பார்க்க முடியும்.

பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த காப்டன் A. F. பக்ஸ்லியின், தலைமையின்கீழ் 200 படகுகள் சென்றன. அவைகளுக்கு பிரிடனின் மிகவும் கியாதிபெற்ற யுத்தக் கப்பலான வார்ஸபைட்டும், ராபர்ட்ஸ், எரிபஸ் என்ற சிறிய யுத்தக் கப்பல்களும் சென்றன. மேலும் அவைகளுக்கு சமீபத்தில் பீரங்கிகளும், படையெடுப்புப் படகுகளிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகளும், படைகளை இறக்கும் ஸப்ளைப் படகுகளும் உதவிசெய்து வந்தன. இந்தப் படகுகள் பேரில் ஜெர்மன் கடற்கரை பீரங்கிகள் குண்டுகளைப் போட்டு சென்ற படகுகளில் ஐந்தில் நான்கு பாகம் மூழ்கடிக்கப்பட்டது அல்லது பலமாகப் பழுதாக்கப்பட்டது. அப்படியிருந்தும் படையெடுப்புப் படைகள், பீரங்கிக் குண்டுகளையும் பொருட்படுத்தாமல் தீவின் மேற்கிலும் தென்மேற்கிலுமுள்ள முழங்கால் ஆழமுள்ள சகதிகள் வழியாகச்சென்று டாம்பர்ச், வெஸ்ட் காபல்லி, பிளஷிங் துறைமுகம் முதலியவற்றைக் கைப்பற்றினுர்கள். கடலில் இடுப்பளவு ஆழமுள்ள ஜலத்தைத் தாண்டிச்சென்று கரையை அடைந்த படைகளுக்கு கெட்ட கால நிலைமையையும், சப்தத்துடன்கூடிய காற்றுகளும், இன்னல்களை இழைத்ததுடன், கப்பல் போக்குவரத்துக்கும் முற்போக்கான விமானப் படைத் தாக்குதலுக்கும் சிரமங்களை ஏற்படுத்திவிட்டன. எதிர் காலத்தில் வால்செர்னைத் தாக்கிய ஒன்றுபட்ட நடவடிக்கைகள், எலிஸபத் மகாராணியார் காலத்திற்குப்பின் ரைன்நதி முகத்துவார பிரதேசத்தில் நடைபெற்ற பிரிடனின் துணிவு நடவடிக்கைகளில் மிகவும் பிரக்கியாதி பெற்றதென்று கருதப்படும்.

### ருஷ்ய துணைக்காவல் கப்பல்களின் வெற்றி.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள நேசதேசப் படைகளுக்கு சாமான்களைக் கொண்டு போகும் கடல் மார்க்கங்களில் பிரிடன் ஆதிக்கம் பெற்றிருக்கிறதென்பதற்கு சமீபகாலத்தில் துணைக்காவல்கொண்ட கப்பல்கள் வெற்றிகரமாக வந்தது ஒரு உதாரணமாகும். ஒரு பெரிய கப்பல் கூட்டம் பிரிடனிலிருந்து வடக்கு ருஷ்யாவுக்கும் அங்கிருந்து பிரிடனுக்கும் பிரிடிஷ்

உள்நாட்டு கடற்படையின் உதவியுடனும், விமானம் தாங்கிக் கப்பல்களுடனும், யூ படகுகளின் தாக்குதலுக்குட்பட்டபோதிலும், யாதொரு கப்பலுக்கும் சேதமன்னியிலும் பத்திரமாகவந்து சேர்ந்தது. ஆர்க்டிக் கடல் வட்டாரத்தில் நடைபெற்ற அநேக நடவடிக்கைகளில் மூன்று ஜெர்மன் யூ படகுகள் அழிக்கப்பட்டன, அநேகம் பழுதுபட்டன. வேவுபார்த்த ஒரு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. விண்டெக்ஸ், ஸ்ட்ரைகர் என்ற விமானந் தாங்கிகளில் சென்ற ஸ்வோர்ட் பிஷ், அவுட் வாணத்தைப்போடும் ஹரிகேன் விமானங்களும், நாசகாரிகளும், சிறிய படகுகளும், போர்க்கப்பலும் தாக்குதலைச் செய்தன. உதவி அட்மிரல் F. H. G. டார்லிம்பிள் ஹாமல்டன், C. B. இந்த நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்தார். கைட் என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

இதற்கு நேர் விரோதமாக மற்றொரு சம்பவம் நேர்ந்தது. நவம்பர் 1-ம் தேதியன்று லேசான பிரிடிஷ் கடற்கரைக் கப்பல்கள் ஹுக் ஆப் ஹாலந்துக்கு சமீபத்தில் ஜெர்மன் கடற்கரைத் துணைக்காவல் கப்பல்களை வழிமறித்து ஒரு நடுத்தரமான சர்பராக் கப்பலை மீன் வெடியால் மூழ்கடித்தன. மற்ற அநேகம் கப்பல்களையும் பழுதுபடுத்தின. பிரிடனுக்கு ஒரு கப்பல்கூட நஷ்டமாகவில்லை. ஒருவருக்குமட்டும் உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

### ஏஜியன் கடலில் வெற்றிகள்.

உதவி கடற்தளபதி ஸர் ஹென்ரி ராலின்ஸ்ஸிடமுள்ள பிரிடிஷ் கடற்படையும், விமான தாங்கிகளில் செல்லும் விமானப்படையும், தெற்கு கிரீஸிலிருந்து பின்வாங்கும் ஜெர்மானியர்களுக்குத் தொந்திரவளித்தனவென்றும், பிரிடிஷ் படைகள் இறங்குவதற்கும் அவர்களுக்கும் கிரீஸிலும் ஏஜியன் தீவுகளிலுமுள்ள பொது ஜனங்களுக்கும் சர்பராக்களை அனுப்புவதற்கும், ஒத்தாசை செய்தனவென்றும் பிரிடிஷ் கடற்படை இலாகாவின் முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் வெளியிட்டிருக்கிறார். ஆறு வாரங்களுக்குள்ளாக எதிரியின் 31 யுத்தக் கப்பல்களும், போக்குவரத்துக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. 40 சிறிய படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன. அவை விர, 16 கப்பல்களும், சாமான் கப்பல்களும், 15 சிறிய படகுகளும் பலமாக முடமாக்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவுக்கும், ஆபிரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்கும் மத்தியிலுள்ள இந்துமஹாசமுத்திரத்தில் பிரிடனின் தூரக்கிழக்குக் கடற்படை பூர்ணமான ஆதிக்கம் பெற்றுவிட்டதென்று கடற்தளபதி ஸர் ஜேம்ஸ் சோமர்வில் சொல்லுகிறார்.

யுத்த ஆரம்பத்திலிருந்து 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் முடிய கடல் மார்க்கமாக 10,600,000 பிரிடிஷ் கடற்படை மாலுமிகள் சென்றிருக்கிறார்கள். அவர்களில் எதிரி நடவடிக்கையால் 2,978 பேர்கள்தான் உயிரை இழந்தார்கள். இந்தப் புள்ளிவரங்கள் பிரிடனுக்கு விசாலமான சமுத்திரங்களிலும், குறுகலான கடல்மார்க்கங்களிலும் ஆதிக்கம் இருக்கிறதென்பதை வெளிப்படுத்துகின்றன.

---

## சமாதான ஏற்பாடு.

### மார்ஷல் ஸ்டாலினின் செய்தி.

(டைம்ஸ் பத்திரிகை)

மாஸ்கோவில் நடைபெற்ற ஆண்டுவிழா தினத்தன்று மார்ஷல் ஸ்டாலின் ஆற்றிய சொற்பொழிவு ஐரோப்பாவின் விதியை முடிவு செய்யக்கூடியதாக இருக்கிறது.

சமீப எதிர்காலத்தில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளிடமிருந்து ஆயுதங்கள் பிடுங்கப்பட்டபின் சம்பவங்களின்றும் ருஷ்யாவுக்கு அதிகாரம் வகிக்கும் ஸ்தானம் ஐரோப்பாவில் கிடைத்துவிடும். அதை வகிப்பதற்கு அதனிடம் இயற்கையாகவும் சேர்க்கையாகவும் அதிக பலமிருப்பதால அதற்குக் காலவரம்பை ஏற்படுத்த முடியாது. இந்த அதிகாரம் பிறர் நாடுகளின்பேரில் ஆதிக்கம் பெறவோ, அல்லது இதர நாடுகளிலுள்ள ஜனசமூக அமைப்பை தலைகீழாகக் கவிழ்த்துவிடவோ உபயோகிக்கப்படாது என்ற அறிகுறிகள் காணப்படுகின்றன.

மார்ஷல் ஸ்டாலின் அவருடைய சொற்பொழிவில் ஒரு பெரிய வல்லரசுக்குள்ள பொறுப்பை அவர் அறிந்து ஒப்புக்கொண்டார் என்ற தோற்றம் காணப்படுகிறது. உலக வல்லரசுகளின் சமஷ்டியில் ருஷ்யா முக்கியமான ஸ்தானத்தை வகிக்கவேண்டும். இந்த சமஷ்டிதான் பொதுவான சமாதானத்துக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். உலகத்தில் எதிர்கால க்ஷேமத்தை நிலை நாட்ட, உலக யுத்தத்தில் நேசதேசத்தார்கள் ஒத்துழைத்தது போல் சர்வதேசங்களும் ஒத்துழைக்கவேண்டுமென்று அவர் நம்புகிறார். நேசதேசத்தார்கள் ஒத்துழைத்ததனால்தான் அவர்கள் தற்பொழுதிருக்கும் நிலைமையை அடைந்திருக்கிறார்கள். தப்பிஓட முடியாதபடி எதிரிகளும் இடுக்கியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதேவிதமாக சமாதானத்துக்கும் நேசதேசத்தார்கள் ஒத்துழைப்பார்களென்றும் ஸ்டாலின் எதிர்பார்க்கிறார்.

வெற்றிக்குப்பின் யுத்த தந்திரத்துக்குத் தொடர்ச்சியான ஒரு வேலையை நேசதேசத்தார்கள் மேற்கொள்ளவேண்டுமென்று அவர் எதிர் பார்க்கிறார். அதாவது அக்கிரம யுத்தம் செய்யும் தேசத்தை நிராயுதபாணியாக்கவேண்டும். மறுபடியும் அந்த தேசங்கள் தலையெடுக்காமல் தடுப்பதற்குப் போதுமான பலத்தை வைத்திருக்கவேண்டும். அதிகாரத்தை அமுல் நடத்தக்கூடிய சக்தியை அமைக்கவும், சமாதானத்தைப் பரிபாலிக்கவும், சர்வதேச சம்பந்தங்களை நடத்தவும், சக்தியுள்ள சர்வதேச ஸ்தாபனத்தை யுத்தத்திற்குப்பின் அமைக்க சர்வ தேசங்களுடன் ருஷ்யாவும் ஒத்துழைக்குமென்று ஸ்டாலின் சொல்லிவிட்டார். டம்பார்டன் ஒக்ஸ் மஹா நாட்டில் நிறவப்பட்ட உத்தேசமான முடிவுகளை ஸ்டாலின் ஒப்புக்கொண்டு விட்டார். அரசியல் அமைப்பு வேலையில் பெரிய வல்லரசுகளுக்குள் அபிப்பிராய பேதங்களில்லாமல் தடுத்துவிடக்கூடுமென்று அவர் நினைக்காவிட்டாலும், அபிப்பிராயபேதங்களை நன்னறிவுடனும், ராஜதந்திர முறையிலும், விவாத மூலமாகவும், சமாதான முறையிலும் தீர்த்துவிடலாமென்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

அநேக காலம்வரையில் சமாதானம் நீடித்திருப்பதற்கு அவர் முக்கியமான சில அம்சங்களை நம்பியிருக்கிறார். ஒன்றுபட்ட கொள்கையை நடத்துவதற்கு நேசதேசங்களில் முக்கியமாக உள்ள மூன்று வல்லரசுகளின் சக்தியை அவர் நம்பியிருக்கிறார். அவர்கள் இதை சாதித்துவிடுவார்களென்றும் அவருக்கு நம்பிக்கையிருக்கிறது. ஏனெனில் ருஷ்யா, பிரிடன், அமெரிக்கா ஆகிய மூன்று வல்லரசுகளுக்குமிடையே உள்ள நட்பு அகஸ்மாத்தாகவும் தாத்காலிகமாகவும் ஏற்பட்டதல்ல. அந்த நட்பு மிகவும் முக்கியமான நோக்கங்களுக்காகவும் நீண்டகால அக்கரைகளுக்காகவும்தான் ஏற்பட்டிருக்கிறது.

## ஸ்பெயினில் ரத்தம் சிந்தாமல் புரக்ஷி.

### குடியரசுக்கக்ஷியின் 6 குறிப்புகளுள்ள நிகழ்ச்சி.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

ஸ்பானிஷ் குடியரசுக் கக்ஷிக்காரர்கள் பழிவாங்க விரும்பவில்லை என்று டெயிலி எக்ஸ்பிரஸின் காரியாலய நிருபர் எழுதுகிறார். ரத்தம் சிந்தாமல் ஸ்பெயினில் புரட்சி ஏற்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஸ்பானிஷ் குடியரசுக் கக்ஷிக்காரர்கள் டூலூஸில் நடந்த கூட்டத்தில் 6 குறிப்புகளுள்ள நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

1. ஸ்பெயினுக்கும், ஜெர்மனிக்குமுள்ள சம்பந்தங்களை ரத்து செய்வது, அட்லாண்டிக் சாஸனத்தை ஏற்றுக்கொள்ளுவது.
2. பொதுஜன வாழ்க்கையை சுத்திகரிப்பது.
3. பிராங்கோ கைது செய்திருக்கும் ராஜீயக் கைதிகளுக்கு மன்னிப்புச் செய்வது.
4. முக்கியமான உரிமைகளைத் திரும்பவும் வழங்குவது.
5. அநியாய லாபங்களை அடக்கியாளுவது.
6. பிரதிநிதித்துவ சபையை தேர்ந்தெடுப்பது, அதற்கு பிரான்ஸிலுள்ள ஸ்பானிஷ் குடியரசுக் கக்ஷிக்காரர்கள் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்வது.

இந்தக் கூட்டத்துக்கு சர்வ கக்ஷி பிரதிநிதிகளும், எல்லா மத பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். ஆக்கிரமிப்பு காலத்தில் மாக்விப்படைகளுடன் ஒத்துழைத்த ஜெனரல் பெர்லுண்டஸ் காம்பாட்டி ஒரு பேட்டியின்பொழுது பின்வருமாறு சொன்னார். "பிரான்ஸுக்குச் சங்கடம் விளைவிக்கக்கூடிய ஒரு சம்பவம் நடைபெறாமல் தடுக்க நாங்கள் விரும்புகிறோம். ஜனநாயகக் கக்ஷியும், தாராளக் கக்ஷியும், கதோலியர்களும், ஜனசமூகக் கொள்கையுள்ளவர்களும், பொதுஉடமைக் கக்ஷிக்காரர்களும் ஒன்றுபட்டு பாடுபடுகிறோம். வெற்றிக்குப்பின் ஸ்பெயின் பூராவும் அதன் தேவைகளை நிர்த்தாரணம் செய்யவேண்டும். குடியரசு ஆக்ஷியையோ, மன்னர் ஆக்ஷியையோ அது முடிவு செய்துகொள்ளவேண்டும். நாம் அநேக கஷ்டங்களை அனுபவித்திருக்கிறோம். பிரான்கோவை முறியடித்தபின் நாங்கள் பழிவாங்குவதாக உத்தேசமில்லை. பாஸிதத்துவத்தினாலும், ஜெர்மனியின் வேண்டுகோளினாலும் பாழாய்ப்போன தேசத்தை புனருத்தாரணம் செய்வோம்."

அடைக்கலம் புகுந்த ஸ்பானிஷ் குடியரசுக் கக்ஷியினரின் கூட்டுறவு தேசிய எஸ்பாக்னோலா விரிவான தேசிய விடுதலைக் கமிட்டியை நியமிக்க ஒப்புக்கொண்டுவிட்டது. ஆல்ஜியர்ஸிலுள்ள பிரெஞ்சு தேசிய கமிட்டியைப்போல இந்தக் கமிட்டியையும் நேசதேச வல்லரசுகள் ஒப்புக்கொள்ளுமென்று நம்பப்படுகிறது.

# பஸிபிக்கில் அடுத்த நடவடிக்கை என்ன?

**(கமாண்டர் கென்னத் எட்வர்ட்ஸ், டெயிலி டெலகிராப் பத்திரிகை.)**

கடற்படைகள் தூக்குத்தூக்காக இருப்பதின் தவறுதல் பிலிப்பைன்ஸ் பிராந்தியத்தில் காணப்பட்டதுபோல் வேறு ஒரு இடத்திலும் காணப்படவில்லை. ஒன்றுபட்டு பலமாகத் தாக்காமல் ஜப்பானிய கடற்படை தூக்குத்தூக்காக மூன்று தருதிகளாகத் தாக்க முயன்றதால் அவைகள் ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்ய முடியவில்லை. அதன் விளைவாக ஒவ்வொன்றும் தோல்வி பெற்றது.

அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விதமாக அஸ்திவாரமற்ற சூதாட்டத்தில் ஜப்பான் ஏன் இறங்கிற்று என்று ஆச்சர்யப்படாமலிருக்க முடியவில்லை. இது யுத்த தந்திர முறையில் உபயோகமற்றது. கதியற்றுத்தான் இந்த நடவடிக்கையை ஜப்பான் மேற்கொண்டதென்று தோன்றுகிறது. இந்த நடவடிக்கைக்குத் தூண்டுகோல் ஜப்பான் கடற்படையைத்தவிர மற்றொரு உயர்வான அதிகாரி என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது, அந்த அதிகாரியும் பிலிப்பைன்ஸில் நேசதேசத்தார்கள் அடி வைக்கும்படி செய்து விடுவதிலிருந்து ஜப்பானுக்கு ஏற்படும் அவமானத்தை மீட்க முடியாதென்று அறிந்துவிட்டார்.

கடற் தளபதி நிமிட்ஸ் அவருடைய நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டார். அதாவது சைனாவுக்கு நேர் முகமாகச்செல்ல கடல் மார்க்கத்தில் ஒரு பாதையை ஏற்படுத்தி அதன்பின் டோக்கியோவைத் தாக்குவது. அடுத்தபடியாக அவர் ஹைபாங்க் ஹானாயை நோக்கியுள்ள ஹைனான் என்ற பெரிய தீவைத் தாக்குவார். அதன் மூலம் தெற்குச் சைனாவுக்குப்போகும் நேர் வழி திறக்கப்படும். அநேக வருஷங்களாக ஜப்பானியர்கள் ஹைனானை பலப்படுத்தியிருக்கிறார்கள். அதில் உபயோகமுள்ள துறைமுகங்களும் விமான தளங்களுமிருக்கின்றன.

பிரிடனின் யுத்த தந்திரத்தைப்பற்றி ஒரு அறிகுறியும் காணப்படவில்லை. அந்த யுத்த தந்திரம் சமீப எதிர்காலத்தில் இந்து மகா சமுத்திரத்தின் நடவடிக்கையிலிருந்து வெளியாகும். ஆகையால் சுமத்ராவுக்கு வடமேற்கு முனையிலுள்ள ஜப்பானிய தளத்தையும், நிகோபார் தீவுகளையும் தாக்குவதன் மூலம் நடைபெற்ற வங்காளவிரிகுடாக்கடல் நடவடிக்கையை ஒருவரும் அலக்ஷியம் செய்ய முடியாது.

இந்தப் பிராந்தியத்தில் பிரிடனின் தீவிரமான முன்னேற்றமும் பிலிப்பைன்ஸிலிருந்து மேற்கு முகமாக மற்றொருமுன்னேற்றமும் ஏற்பட்டால் மலேயாவிலும், டச்சு கிழக்குஇந்தியத் தீவுகளிலும் உள்ள ஜப்பானியப்படைகள் தாய் நாட்டிலிருந்தும், சர்பராக்களிலிருந்தும் துணிக்கப்படுவார்கள். ஜப்பான் கடற்படை மேன்மேலும் அழிவு பட்டால் நேசதேசப் படைகள் யாதொரு தாமதமன்னியிலும் ஜப்பானியத் தீவுகளை ஒன்றன்பின்ஒன்றாகத் தாக்கக்கூடும். ஜப்பானிய கடற்படை நேசதேசத்தாருடைய படைகளுக்கும் ஜப்பானுக்கும் யாங்டீஸ் நதியின் முகத்துவாரத்துக்குச் செல்லும் முக்கியமான கடல் மார்க்கத்துக்கும் மத்தியில் திரட்டுப்பட்டுவிட்டால் பார்மோஸாத்தீவுக்கருகில் பெரிய கடற்போர் மூளும். இந்தப் போரின் முடிவைப்பற்றியும் நமக்குச் சந்தேகமில்லை, ஏனென்றால் பிரிடனும் அமெரிக்காவும் ஏராளமான கடற்படைகளையும், விமான பலத்தையும் உபயோகப்படுத்தக் கூடும்.

---

# தரைப்போருக்கு ஆயத்தம்.

## பஸிபிக் போரின் இரண்டாவது கட்டம்.

பிலிப்பைன்ஸில் கிடைத்த கடற்படை வெற்றியை டிராபால்கர் யுத்தத்துக்கு ஒப்பிடலாமென்று ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் ஸிட்னி நிருபர் எழுதுகிறார். சமுத்திரங்களில் நமது கடற்படைக்குச் சவால் விடுக்கக்கூடிய ஜப்பானியக் கடற்படையை ஒவ்வொரு போரும் சின்னாபின்னம் செய்துவிட்டது. ஒவ்வொரு வெற்றியும் தரைப்போருக்குச் சாதகம் அளித்து வருகிறது.

1942-ம் வருஷத்தில் ஸாலமன்ஸ், நியூகினியா முதலிய இடங்களில் ஆரம்பமான நேசதேச முன்னேற்றம் என்ற ஜப்பானிய யுத்தத்தின் இரண்டாவது கட்டம் பிலிப்பைன்ஸைத் திரும்பிப் பிடிப்பதுடன் முடிவடையும். அப்பொழுது அமெரிக்கர்கள் ஆசியா கண்டத்திலிருந்து நூறு மைல்களுக்குள்ளாகவும், ஜப்பான் ஊடுருவிச் சென்ற கிழக்குக் கோடியான கில்பர்ட் தீவுகளிலிருந்து 3,500 மைல்களிலும், பேர்ல் துறைமுக நடவடிக்கைக்குப்பின் அமெரிக்கப் கடற்படை பின்வாங்கின, ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து 7,000 மைல்களிலும் உள்ள இடத்திற்கு வந்துவிடுவார்கள்.

பிலிப்பைன்ஸில் 16 போர்க் கப்பல்களும், கணக்கிடமுடியாத விமானந்தாங்கிகளும் கொண்ட ஒரு பெரிய கடற்படையை நிறுத்தி வைப்பது யுத்தத்தில் சிறந்த நடவடிக்கை

யாகும். தூரக்கிழக்கு சமுத்திரங்களில் நாம் அமைத்திருக்கும் கடற்படை ஸ்தாபனங்களின் பரிமாணத்தையும் வியாபகத்தையும் நாம் அறியக்கூடுமானால் அந்த விபரங்கள் நம்மை ஸ்தம்பிக்கச் செய்துவிடும். இந்த விதமான மகத்தான விஸ்தரிப்பு நடவடிக்கையில் பற்பல பிரச்னை சிக்கலாக இருப்பதால் அநேக கப்பல்களில் அனுபவம் பெறாத அநேகர்கள் இருந்து வருகிறார்கள். ஆகிலும் பணியாரத்தின் சிலாக்கியம் அதன் ருசியைப் பொருத்ததாகும். விமானந் தாங்கிகளில் சென்ற விமானங்களும், நெடுந்தூரம் செல்லும் வெடி விமானங்களும் தரையிலுள்ள ஜப்பானியப் படைகளைத் தாக்கி பார்மோஸா—பிலிப்பைன்ஸ்—கிழக்கு இந்தியத் தீவுகள் பிராந்தியத்தில் ஏறக்குறைய 1,000 விமானங்களை அழிக்கக்கூடுமென்று ஏற்பட்டது ஜப்பானை முறியடிக்கக்கூடுமென்பதற்கு அறிகுறியாகும். ஜப்பான் ஏற்பாடு செய்யக்கூடிய எந்த இன்னல்களையும் நாம் சமாளித்து விடுவோமென்றும் தினசரி நமக்கு ருஜுக்கள் கிடைத்துவருகின்றன.

---

## சிண்டிட்டுகளுடன் சம்பாஷணை.

(தெற்கு இந்தியா சஞ்சிகை.)

சிண்டிட்டுகளுக்கும் மற்ற துருப்புகளுக்கும் அடையாளம் காட்டக்கூடிய வகையில் சிண்டிட்டின் வலது புஜத்தில் தங்க முலாம் பூசிய ஒரு பெரிய அடையாளத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அற்புதச் செய்கைகளுக்காக அவர்கள் வரிசையாக கௌரவ நாடாக்களை அணிந்து கொண்டிருக்கவில்லை. அவர்களில் அநேகருக்கு 1939—43-ம் வருஷத்திய ஸ்டார் பதக்கங்கள் வழங்கப்படலாம். அதை அவர்கள் அணிந்துகொள்ளவில்லை. போர்முனைச் சேவைக்காக வழங்கப்படும் இந்த கௌரவ அடையாளத்தை சௌரிங்கி வீரர்களுடன் பகிர்ந்துகொள்ளுவது என்பதை அவர்கள் விரும்பவில்லை. சிண்டிட்டுகள் நல்ல திடகாத்திரமுள்ளவர்களல்ல. அதில் சேர்ந்துள்ளவர், மிட்லாந்தைச் சேர்ந்த விவசாயியாகவோ, வேல்ஸைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளராகவோ, அல்லது காக்னியைச் சேர்ந்த பழ வியாபாரியாகவோ இருந்தாலும் அவர் மெல்லிய சரீரமும் சுறுசுறுப்புமுள்ளவராக இருப்பதால், அவர் எந்தக் கஷ்டத்தையும் சகித்துக்கொள்ள சக்திபெற்றிருக்கிறார். அவருக்குத் தேக பலம் குறைந்துவிட்டாலும் மன உறுதி அதிகமாக இருக்கும். மற்றவர்களைவிட அவர்களிடம் அடக்கமும், அனுபவ சித்தமான அமைதியும் காணப்படுகின்றன. அவர்கள் தத்வதரிசிகள்.

நான் சம்பாஷணை செய்தவர்கள் இங்கிலாந்தின் பல பாகங்களிலிருந்தும் பல தொழில்களிலிருந்தும் வந்திருந்தவர்கள். அவர்களில் முக்கியமானவர்கள், விவசாயி, மதுபான வியாபாரி, கொத்தன், மோட்டார் ஓட்டி, ஸ்கூல் டீச்சர், மதத்தைப் படிக்கும் மாணுக்கன், ஒரு சீமான். அவர்களிடம் ஒரு குணம் விசேஷமாகக் காணப்பட்டது. அவர்கள் அந்நாட்டுக்குள் சென்று போர் புரிந்து வெற்றி பெற்றார்கள் என்பது மட்டுமல்ல. அவர்கள் நாட்டில் மட்டுமில்லாமல் காடுகளிலும் சென்று, ஆங்காங்குள்ள ஜனங்களின் நடை உடைகளையும், குணுதிசயங்களையும், சரித்திரத்தையும் அறிந்துவிட்டார்கள். ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் வரையக்கூடிய தகவல்களை வைத்திருந்தார்கள். அவ்விதம் ஒருவரும் எழுத மாட்டார் என்று நினைக்கிறேன். ஆகிலும் பிரிடனிலுள்ள பத்திரிகைகள் அவர்களின் நடவடிக்கையை இறுதியிலாவது நன்கு மதிப்பார்களென்றும் மற்றப் போர்முனைகளைவிட அவர்களின் நடவடிக்கை இரண்டாம் பக்ஷமானதென்றும் அவர்கள் கருதாமல் இருப்பார்களென்றும் நம்புகிறார்கள்.

நாங்கள் சில நாட்களுக்குப் போதுமான உணவுப்பொருள்களை எடுத்துக்கொண்டு காடுகளுக்குள் செல்லுவோமென்றும், அவைகள் அற்றுப்போனவுடன் உணவுப்பொருள்கள் ஆகாயத்திலிருந்து போடப்படுமென்றும் அவர்கள் சொன்னார்கள். சில சமயங்களில் கடக்க முடியாத பிரதேசங்கள் வழியாக ஆகாரத்தை எதிர்பார்த்துச் சென்றபின் அந்தப் பிரதேசம் பூராவும் பனியால் மூடப்பட்டிருப்பதாக அவர்கள் காண்பதுண்டு. மூன்று நாட்களாக விமானங்கள் வட்டாரமிட்டு, அவர்களைப் பார்க்கமுடியாததும், ஆகாரங்களைப் போட முடியாமலுமிருந்தபொழுது அவர்களுக்கு ஏற்பட்ட மனத்தாங்கலை ஒருவரும் சுலபமாக அறிய முடியாது. விமானிகள் சாதுர்யத்துடனும் துணிவுடனும் தாழப்பறந்து சிண்டிட்டுகளைக் கண்டுபிடித்தவுடன் உணவுப்பொருள், வெடி மருந்து, ஆடைகள் வைக்கப்பட்டிருந்த விமானத்திலிருந்து குடைகள் விரிக்கப்பட்டு அதன் மூலம் சர்பராக்கள் கீழே தள்ளப்பட்டன. அவைகளில் தங்கள் நாட்டிலிருந்து வரும் தபால்கள் அடங்கிய பையும் கீழே தள்ளப்படும் என்று அவர்கள் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார்கள்.

இவ்விதமான கஷ்டமான வாழ்க்கைக்குப்பின் அவர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து அமைதியுள்ள பொதுஜன வாழ்க்கையில் எவ்விதம் திருப்தியடைவார்கள் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

மதப்படிப்பில் ஈடுபட்டிருந்தவரை நான் கேட்டபொழுது அவன் பின்வருமாறு சொன்னன். "நான் திரும்பிச் சென்று என்னுடைய படிப்பைத் தொடர்ச்சியாக நடத்துவேன். பாதிரியாக இருக்க யோக்கியதைக் குறைவாக இல்லாததுடன் எனக்குச் சென்ற வருஷத்தில் ஏற்பட்ட அனுபவம் என்னுடைய தொழிலுக்குச் சிறந்த மூலதனமாக இருக்கும். ஜீவராசிகளைப்பற்றி எனக்குச் சிறந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் பயன்படும் படி உபயோகப்படுத்துவேன்".

ஸ்கூல் மாஸ்டரை நான் வினவினேன்: அவன் பின்வருமாறு பதிலுரைத்தான். "நான் எவ்விதம் திரும்பிப் போவேனென்று வியப்புறுகிறேன். என்னுடைய பழைய தொழிலை என்னால் நடத்தமுடியாது. மூன்று வருடத்திற்கு இருந்ததுபோல் நான் இப்பொழுதிருக்கவில்லை. நான் வாழ்க்கையை நடத்துவதற்குமுன் கஷ்டப்படவேண்டும். எனக்குக் கலியாணம் ஆகவில்லையென்பதில் நான் திருப்தியடைகிறேன். நாங்கள் மாறுதலடைந்து விட்டோம். சிலர் இதை அறிந்துகொள்ளவில்லை. சிலர் அவர்களின் வாழ்க்கையில் சிரமப்படுவார்கள். மற்றும் சிலர் நிலைமையை உணர்ந்து சமாளிக்க முயலுகிறார்கள். என்னுடைய சிநேகிதனை பாதிரியும் மாறிவிட்டார். சாதாரணமான பாதிரியாக இருப்பதிலிருந்து அவர் பெரிய பாதிரியாக ஆகிவிடுவார்".

எதிர் காலத்தில் மதிக்க முடியாதவர்களில் அவர் ஒருவர் என்று எண்ணி அவருடைய வார்த்தைகளைப் பரிசிலனை செய்தேன். அவர் காயம் படாமலும், நோய்வாய்ப்படாமலும், மன உறுதி குலையாமலும், சிறந்த பொதுஜனம் போலும் அவர் திரும்பி வரலாம். ஆகையால் அவருடைய பிரச்னையை நாம் கவனிக்காவிடில் நாம் அவரிடம் அனுதாபம் காட்டியதாக ஆகாது. ஏனென்றால் அவர் சரியான வாழ்க்கையை நடத்தமுடியாது. குடும்பத்தை நடத்த முடியாது.

நவீன யுத்தத்தின் கொடுமைகளை அநேகர்கள் மன உறுதியையும், சுய பிரக்ஞையையும் இழந்துவிடாமல் அனுபவிக்கக்கூடும். ஆகிலும் நிலயங்களையும், பள்ளிக்கூடத்தையும், ஆபீஸ்களையும் விட்டுச் சென்ற அவர்கள் எண்ணங்கொண்டிராத வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டார்கள். அவர்கள் போர் புரிந்து எதிரிகளைக் கொன்று விடுகிறார்கள். அவர்களுடைய தலைவர் இறந்தபின், அவர்களுடைய சகாக்களையும் மற்றவர்களையும் உயிர்ப்பிப்பதோ மாய்ப்பதோ அவர்களின் முடிவைப் பொருத்ததென்றும் அவர்கள் அறிய வேண்டும். இவைகளை எல்லாம் அனுபவித்தபின் அவர்கள் மாறுதலடையாமலிருக்க முடியாது.

நம்முடைய அஞ்ஞானத்தாலும், நம்முடைய அறியாமையாலும் இந்த பிரச்னைகளுக்கு நம்மால் பதிலுரைக்க முடியாது. இந்த பிரச்னைகளுக்குப் பரிகாரத்தை அவர்களேதான் சொல்லவேண்டும். அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்றால் அப்பொழுது அவர்களுக்கு, நம்முடைய அனுதாபத்தைக்காட்ட நம்மிடம் பகுத்தறிவு இருக்கிறது.

---

## சுமாத்ரா—விசித்திரமான தேசம்

(மர்ரே ஒளல்டன்)

அடர்த்தியான பிராசீனமான காடுகள், ஆழமுள்ள காட்டாறுகள், மூர்க்கமான காட்டு மிருகங்கள், 1,60,000 சதுர மைல்கள் கொண்ட அபிவிருத்தி அடையாத பிரதேசம்—இப்பேர்பட்ட சுமாத்ராத் தீவின் பேரில்தான் இந்திய தளத்திலிருந்து புறப்பட்ட சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் சமீப காலத்தில் குண்டுகளை வீசின. இந்தக் கட்டுரையில் மர்ரே ஒளல்டன் இந்த விசித்திரமான தீவின் இயற்கை அமைப்பையும் உலோக ஐஸ்வர்யங்களையும் வர்ணிக்கிறார்.

உலகத்திலுள்ள ஆறு மிகப்பெரிய தீவுகளில் சுமாத்ராவும் ஒன்று. ஆகிலும் 1,60,000 சதுர மைல்களுள்ள இந்த தேசத்தைப்பற்றி அநேகருக்கு ஒன்றும் தெரியாது. இது உலகத்திலுள்ள விசித்திரமான நாடுகளில் ஒன்றாகும்.

அங்கே முடிவற்ற அடர்த்தியான காடுகளும், மனிதர்கள் கடந்திராத பெரிய மலைகளும் இருக்கின்றன, சுமாத்ராவின் மூர்க்கத்தனமான பிராணிகளுள்ள அடர்த்தியான காடுகளைப் பற்றி அநேக விசித்திரமான கோரமான கதைகளிருக்கின்றன. அதன் சிரமங்கள் மிகுதியாக இருப்பதால் ஒரு ஆராய்ச்சிக்காரரும் அங்கு சென்று உயிருடன் திரும்பி வர முடியாது. அதிகப்பொருள் செலவுடன்தான் அவ்வித முயற்சியைச் செய்ய முடியும்.

அடர்த்தியான காடுகளில் அநேக ரக மரங்களும் மொரும்புகளுமிருக்கின்றன மரத்துக்கு மரம் தாவிச் சென்றே ஒரு மனிதக்குரங்கு அத்தீவின் குறுக்கே சென்றுவிட

முடியுமென்று சொல்லப்படுகிறது. பல ரகமான குரங்குகள் அங்கு ஏராளமாகயிருக்கின்றன. ஜனங்கள் தேங்காய்களைப் பொறுக்கக் குரங்குகளைத் தயாரித்திருக்கிறார்கள்.

காடுகளில் யானையும், காடியும், புலியும் சஞ்சாரம் செய்கின்றன. முதலைகளும், மலைப் பாம்புகளும், சர்ப்பங்களும், மற்ற ஊர்வன ஜந்துக்களும் ஊர்ந்து செல்லுகின்றன. பகலில் அநேகம் பறவைகள் நாட்டை உயிர்ப்பிக்கின்றன. இரவுகளில் பிரும்மாண்டமான வௌவால்கள் காடுகளில் வளைந்து வளைந்து வட்டாரமிடுகின்றன.

இது சுமாத்ரா ஜாவாவைப் போல் மூன்று மடங்கும், ஹாலந்தைப் போல் 13 மடங்கும் பரப்புள்ளது. ஆகிலும் அதில் 6 மிலியன்கள் தான் ஜனங்கள் வசித்து வருகிறார்கள். இதற்கு எதிரிடையாக ஜாவாவில் 60 மிலியன் ஜனங்கள் இருந்து வருகிறார்கள். அங்கு விவசாயம் பலமாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. சுமாத்ராவின் முக்கியத்துவமுள்ள ஐஸ்வர்யங்களைப் பயன்படுத்தி அதன் செழிப்பான பூமியை சாகுபடிக்குக் கொண்டுவந்தால் 60 முதல் 70 மிலியன் ஜனங்களை அது காப்பாற்றி வரக்கூடும். 1,100 மைல்களுள்ள அதன் நீளமான பாகத்தில் உன்னதமான ஒரு மலைத்தொடர் காணப்படுகிறது, அதன் சிகரங்கள் சில இடங்கள் 12,000 அடிகள் உயரமாக இருக்கின்றன. மலைகளில் 12 எரிமலைகள் சதா காலமும் புகைந்து கொண்டிருக்கின்றன, அணைந்து போன எரிமலையின் குகைகளில் கண்ணாடி போன்ற ஜலமுள்ள ஏரிகள் காணப்படுகின்றன.

மேற்குப் பக்கத்திலுள்ள மலைகள் சமுத்திரத்திற்குள் செல்லுகின்றன. ஆகையால் அங்குள்ள நதிகள் முக்கியத்துவமுள்ளவைகளல்ல. கிழக்குப் பக்கத்தில் மலைகளுக்கு முன் வெண்மையான சம வெளிகள் காணப்படுகின்றன. அதன் வழியாக மனோஜ்யமான நதிகள் செல்லுகின்றன. இந்த நதிகள் நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமுள்ளவை. இவைகளில் படகுகள் செல்லக்கூடும்.

இந்தத்தீவில் உலோக ஐஸ்வர்யமும் மிகுதியாக இருக்கிறது. இவைகளையும் விஞ்ஞான சாஸ்திர மூலம் ஆராய்ச்சி செய்யவேண்டும். சமீப சில வருஷங்களில் எண்ணெய் உற்பத்தி அதிகரித்திருக்கிறது, அநேக நிலக்கரிச் சுரங்கங்களுமிருக்கின்றன. செம்பு, தகரம், இரும்பு, போன்ற உலோகங்களுடன் விலை மதிப்புள்ள தங்கம், வெள்ளி, உலோகங்களும் கிடைக்கின்றன. சுருங்கச் சொன்னால் உலகத்தில் செல்வப் பெருக்குள்ள நாடாகச் செய்வதற்குரிய அநேக ஐஸ்வர்யங்களை சுமாத்ரா பெற்றிருக்கிறது.

தற்பொழுது தீவில் சுமாராக 1,000 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. சுமாத்ராவின் அபிவிருத்திக்கு இருப்புப்பாதைக்குறைவும், ரஸ்தாக் குறைவும்தான் இன்னல்களாக இருக்கின்றன. மிகப் பெரிய நகரங்களில் 50,000 ஜனங்கள் வசித்து வருகிறார்கள்.

ஏழாவது நூற்றாண்டில் ஹிந்துக்கள் குடியேறி ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அது முதல் ஜாவா என்று புராதன ஞாபகச் சின்னங்கள் வெளியிடுகின்றன. ஆறரை நூற்றாண்டுகளுக்குமுன் மார்கோ போலோ இங்கு வந்தார். அதன்பின் அங்கே போர்ச்சுகீஸ்காரர்கள் வந்தார்கள், அவர்களை டச்சுக்காரர்கள் அடித்துத் துரத்தினார்கள். மலாய் நாட்டைச் சேர்ந்தவர்கள் அநேகரும் இங்கு இருக்கிறார்கள். இன்னும் அநேகர்கள் காட்டுமிராண்டிகளாக இருக்கிறார்கள்.

சுமாத்ரா ராணுவ முக்கியத்துவமுள்ளது. கிழக்கு இந்தியத் தீவுகளில் நேசதேசத்தார்கள் முன்னேறுவதற்கு அந்தத் தீவிலுள்ள தளங்களைப் பிடிப்பது உபயோகமுள்ளதாக இருக்கும். இந்தத் தீவு மிகப் பெரியதாகவும் போக்குவரத்துகள் குறைவாகவுமிருப்பதால் ஜப்பானியர்கள் அங்குமிங்கும் சில படைப்பகுதிகளைத்தான் வைத்திருக்கிறார்கள்.

---

## புருக்களுக்கு தீரத்துக்காகப் பரிசுகள்.

### லண்டனில் பரிசு வழங்கும் விழா.

(மாஞ்சஸ்டர் கார்டியன்).

படையெடுப்புக்கு உபயோகமாகயிருந்த இரண்டு புருக்களுக்கு இந்த வாரத்தில் தீரத்துக்காகப் பரிசுகள் வழங்கப்படும். நார்மண்டியிலுள்ள முன்னேறும் வாசலுக்குகருகாமை

யிலிருந்த ஒரு கப்பலிருந்து D. தினத்தன்று முதல் தகவலைக்கொண்டுவந்த கஸ்டாவுக்கும் நார்மண்டியிலிருந்து குறிப்பிடத்தக்க சொற்ப காலத்திற்குள் செய்தியைக் கொண்டுவந்த 'பாடி'க்கும் பரிசு வழங்கப்படும்.

ஏழைமக்களின் நோய்வாய்ப்பட்ட பிராணிகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஜனங்களின் வைத்தியசாலையின் ஸ்தாபகத்தினத்தன்று நடைபெறும் தேனீர்விருந்து சமயத்தில் அந்தப் புருக்களுக்கு "தீரத்துக்காக வழங்கப்படும் டிக்கின் பதக்கம்" வழங்கப்படும். யுத்த சேவைக்காக பிராணிகளைச் சேர்க்கும் ஒரு ஸ்தாபனமும் அதிலிருக்கிறது. உத்தியோக முறையில் தபால் கொண்டுபோகும் புருக்களும் ரக்ஷணையளிக்கும் நாய்களும் அதில் சேர்க்கப்படலாம்.

அந்தக் கழகத்தில் 700 பேர்களிருக்கிறார்கள். அவற்றில் ஐந்துக்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. இந்தப் பரிசுகளை மிஸஸ் A. V. அலெக்ஸாண்டர் வழங்குவாள். இது வைபவமான சமயமாதலால் புருக்களுக்கு ஒரு சிறிது சங்கடம் ஏற்படக்கூடும்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. 1941 முதல் 1943 வரை, பிரிடன் ருஷ்யாவிற்கு என்ன உதவி செய்தது?

2. இதாலியில் ஜுலை மாத முடிவில், பிரிடிஷ் எட்டாம் சேனை——வை பிடித்தபின் ——நதியைக் கடந்தது. அதே சமயத்தில் போலிஷ் துருப்புகள் கிழக்கே——கடல் மேலுள்ள——வைப் பிடித்தது. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்யவும்.

3. ருஷ்யத் துருப்புகள் ஜெர்மனிக்கு எதிரியாய் நடத்திய கோடைகாலத் தாக்குதலின் முதல் 20 நாட்களில் 230 மைல்கள் பிரயாணம் செய்தன. இந்த விகிதம், 1941 ருஷ்யாவின் மேல் படையெடுத்துப் போட்டமுதல் 20 நாட்களில் ஜெர்மன் துருப்புகளின் வேகத்தை விட, பாதியா, அல்லது அதே வேகமா, அல்லது இரு பங்கு வேகமா?

4. ஐரோப்பாவில், எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் போரிடும் அமெரிக்க—கனேடியத் தடிப்பான முதல் ஸ்பெஷல் ஸர்வீஸ் படையுள்ளது என்பதை நேசதேசத்தார்கள் சண்டைகளுக்கு முன்பு வெளிப்படுத்தினர். ஜெர்மனியர்கள் அவர்களை "கரும் பிசாசுகள்" (Black Devils) என்று அழைக்கிறார்கள். முதலாம் உலக மகாயுத்தத்தில் ஜெர்மானியர்கள் "நீலப் பிசாசுகள்" (Blue Devils) "பிசாசு நாய்கள்" (Devil Dogs) இவைகளிடம் கையில் மிகவும் கஷ்டப்பட்டுள்ளார்கள் இவைகள் என்ன?

5. அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் மீண்டும் ஸாம் பிரௌன் பெல்ட்டை அணிகிறார்கள். ஸாம் பிரௌன் யார்? (a) பிரிடிஷாரா? (b) அல்லது குதிரைப் படையாளா? (c) அல்லது பிரிடிஷ் சேனை உத்தியோகஸ்தரா?

**விடைகள்.**

1. 6,778 விமானங்கள், 5,031 டாங்கிகள், 4,620 வண்டிகள், 32,000 டன்கள் அலுமினியம், 37,000 டன்கள் பித்தளை, 81,423 டன்கள் ரப்பர், மேற்கண்டவைகளை, உணவுப் பொருள்கள், இயந்திர சாதனங்கள், பீரங்கிகள், டின், சணல் இதர யுத்த சாமான்கள் கொடுத்ததைத் தவிர கொடுக்கப்பட்டவைகளாகும்.

2. ஆர்னோ, அரானஸோ, அன்கோனா, ஏட்ரியாடிக்.

3. அநேகமாய் அதே வேகம். 20 நாட்களுக்குப் பிறகு அதிகமாய் முன்னேறிய இடத்தில் ஜெர்மானியர்கள் 280 மைல்கள் சென்றிருந்தார்கள்.

4. "நீலப் பிசாசுகள்"—"பிரெஞ்சு காஸியர்ஸ் ஆல்பின்ஸ்"; "பிசாசு நாய்கள்" "அமெரிக்கர்கள் மாரின்கள்".

5. (c) (1824—1901)-இல் பிரிடிஷ் சேனையில் இருந்த ஜெனரல் ஸர் ஸாமுவேல் ஜேம்ஸ் பிரௌன்.

# யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

## 14. கல்வி.—(தொடர்ச்சி).

தொழில் படிப்பு, சர்வகலாசாலைப் படிப்பு.

சொற்பொழிவாளர்கள் :—மிஸ்ட்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
ஸர் ரிச்சர்ட் லிவிங்க்ஸ்டன்.
மிஸ்ட்டர் ஜான் சார்ஜண்ட்.

(1944ஆ அக்டோபர் 30-ம் தேதியன்று பிரிடிஷ் ஒலிபரப்பில் ஒலிபெருக்கப்பட்டது).

ஸ்டீட் : இன்று ஆரம்பக்கல்விக்கு அடுத்த கட்டத்திலுள்ள கல்வியைப்பற்றிப் பேசுவோம். ஆரம்பக் கல்வியைவிட நாம் இப்பொழுது வாழ்க்கை முறையை அணுகிவிட்டோம். லிவிங்க்ஸ்டன், உயர்தரக் கல்வியைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?

லிவிங்க்ஸ்டன் : உயர்தரக்கல்வி இருவகைப்படும். தொழிலுக்காகக் கல்விப்பெற்று அநேகர்கள் டாக்டர்களாகவும், விஞ்ஞான சாஸ்திரிகளாகவும் இன்னும் மற்ற உத்தியோகஸ்தர்களாகவும் சென்றுவிடுகிறார்கள். இவர்களுக்கு அதிகத் தேவை ஏற்படவில்லை. இவர்களுக்கு சிலாக்கியமான உயர்தரக்கல்வி ஏற்பாடுசெய்யப்படவேண்டும். ஆகிலும், எவ்விதமான உயர்தரக்கல்வியை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களுக்கும் நாம் சில வசதிகளை அளிக்கவேண்டும்.

ஸ்டீட் : சார்ஜண்ட், சில வசதிகள் என்பது யாதென்றும், அவைகள் ஏற்கனவே இருந்து வருகின்றனவாவென்றும் உங்களுக்குத் தெரியவருமா?

சார்ஜண்ட் : யுத்த அவசியத்தை முன்னிட்டு நிறுவப்பட்ட திட்டங்கள்மூலம் மேலே சொல்லிய சில திட்டங்கள் அமுலுக்கு வந்துவிட்டன. அதில் நாம் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

ஸ்டீட் : ஆரம்பக் கல்விக்கும், சர்வகலாசாலைப் படிப்புக்கும் மத்தியில் ஒரு படிப்பும் இல்லையா?

சார்ஜண்ட் : இந்தியாவில் ஆரம்பக்கல்வி 11 வயது வரையில் போதிக்கப்படுகிறது. அதன் பிறகு நடுத்தரக்கல்விப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அதன்பின் ஹைஸ்கூல்களிருக்கின்றன. அதன்பின் இண்டர்மீடியட் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் கல்லூரிகளிருக்கின்றன. அதன்பின் சர்வகலாசாலைகளிருக்கின்றன. அவைகளைத் தவிரத் தொழிற் கல்வி ஸ்தாபனங்களுமிருக்கின்றன.

ஸ்டீட் : லிவிங்க்ஸ்டன், இதுதான் உன்னுடைய எண்ணமா?

லிவிங்க்ஸ்டன் : வயது முதிர்ந்தவர்களுக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க வசதியளிக்கப்படவேண்டும். அவர்களுக்கு காரிய காரணங்களைப் பகுத்தறிய சக்திபெற்றபின் என்று சொல்லுகிறேன். அவர்கள் உலகில் சிறிதுகாலம் வாழ்க்கையை நடத்தியபின் என்று நான் சொல்லுகிறேன். அதாவது பள்ளிக்கூடத்தையும் சர்வகலாசலையையும் விட்டுச் சென்றபின் கற்கப்படவேண்டிய கல்வியைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

ஸ்டீட் : சரி, இந்தியாவில் சர்வகலாசாலைகளில் எந்த பாஷையில் போதிக்கப்படுகிறது.

சார்ஜண்ட் : ஒரு சர்வ கலாசாலையைத் தவிர மற்ற இடங்களில் ஆங்கில பாஷை. ஹைதராபாத்தில் மட்டும் உருது.

ஸ்டீட் : ஆகையால் பெரும்பான்மையான இந்தியர்களுக்கு உயர்தரக் கல்வி தாய் பாஷையில் சொல்லிக்கொடுக்கப்படவில்லை. இது மாணுக்கர்களுக்குச் சங்கடமாக இல்லையா?

சார்ஜண்ட் : அயல்நாட்டு பாஷையில் கல்வி பயில்விப்பதில் இந்திய மாணவர்கள் சிரமங்களுக்குள்ளாகுகிறார்களென்பது ஒரு சூந்தகமென்பதை நாம் பொருட்படுத்தத்தான் வேண்டும். இந்தப் பிரச்னையை இந்தியாவிலுள்ள கல்வி இலாகா அதிகாரிகள் அநேக தடவைகளில் பரிசீலனை செய்துவந்திருக்கிறார்கள். மத்திய ஆலோசகர் சபையும் சென்ற ஐந்து வருஷங்களில் இரண்டு அல்லது மூன்று தடவை இதைப்பற்றி விவாதித்திருக்கிறது. சர்வகலாசாலைப் படிப்பிற்கு ஆங்கிலத்தைத்தவிர மற்றொரு பாஷையும் தற்பொழுது உபயோகப்படக்கூடியதல்லவென்று நாங்கள் முடிவுக்கு வந்துவிட்டோம்.

ஸ்டீட் : அப்படியானல் இந்தியாவில் கல்வியை எவ்விதத்தில் அபிவிருத்திசெய்யக்கூடும்.

சார்ஜண்ட்: உயர்தரக் கல்வி சம்பந்தப்பட்டமட்டில் முதல் தரமாக மாணவர்களைப் பொறுக்கி எடுத்து படிப்புக்கு சேர்த்துக்கொள்ளவேண்டும். தற்போழுது ஹைஸ்கூல்களில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு யாதொரு ஸெலக்ஷனும் கிடையாது. சர்வ கலாசாலைக்கும் சுலபமான மெட்ரிகுலேஷன் பரீக்ஷையைத் தவிர வேறுவிதமான தேர்ந்தெடுக்கும் முறையில்லை. சம்பளத்தைக் கொடுக்க சக்திபெற்றவர்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுகிறார்கள். கல்வி இந்தியாவில் லேசாகப் பரவியிருந்தால் முதல் தரமான புத்திசாலிகள் இந்தியாவில் அநேகர்கள் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் மேல் பரப்புக்கு வருவதில்லை. இரண்டாவது ஹையர் அல்லது தேர்ந்தெடுக்கும் கட்டத்திலுள்ள கல்வி சமூகத்தின் தேவைக்குப் பொருத்தமுள்ளதாயிருக்கவேண்டும். அதாவது அவசியமாக உள்ள விவசாயம், கைத்தொழில் போன்ற நடைமுறையில் உபயோகப்படக்கூடிய கல்வி போதிக்கப்படவேண்டும்.

ஸ்டீட்: பொதுவாகச் சொன்னால் இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைகளில் வாழ்க்கையில் ஓய்வு நேரம் கிடைக்குமென்று நினைக்கக்கூடிய மாணுக்கர்களுக்குத்தான் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவ்விதமாக ஓய்வு நேரமுள்ளவர்கள் இந்தியாவிலிருக்கிறார்கள்.

சார்ஜண்ட்: இங்கிலாந்தைவிட அங்கு குறைவானவர்கள் தானிருக்கிறார்கள். சர்வ கலாசாலைகளுக்கு ஏழ்மைத்தனமுள்ள பிள்ளைகளும், பெண்களும் கல்வி கற்கவருவதால் ஓய்வு என்ற அம்சமும் மறைந்து வருகிறதென்று இந்நாட்டில் சொல்லப்படுகிறது. கூடிய சீக்கிரத்தில் பட்டம் பெற்றுவிடவேண்டுமென்ற அவாவும் வெளிப்படுகிறது.

லிவிங்ஸ்டன்: நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகிலும் ஸ்டீட் சொல்லுவது இருபது வருஷங்களுக்கு முன்னிருந்த இங்கிலாந்துக்குப் பொருந்தும். இப்பொழுது அது பொருத்தமாகயிராது. நாம் வயது முதிர்ந்தவர்களின் கல்வியைக் கவனிப்போம். இந்த ஓய்வு நேரம் ஜீவதசையில் பிற்பகுதியில் கிடைக்கக்கூடும். ஒரு வேலையில் அமர்ந்தபின் அதிலிருந்து இரண்டு அல்லது மூன்று மாதம் ரஜா எடுத்துக்கொண்டு கல்வி கற்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொண்டால் சர்வ கலாசாலையிலிருக்கும் பொழுதைவிட அப்பொழுது அதிகமான லக்ஷியக் குறைவுடன் கல்வி கற்கலாம். சர்வகலாசாலைப் படிப்பெனபது மாணுக்கன் பரீக்ஷையில் வெற்றி பெறுகிறானே அல்லது இகழ்ச்சி பெறுகிறானே அதைப் பொருத்து அவனுடைய எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கக்கூடாது.

ஸ்டீட்: இவ்விதமான படிப்பு ஸ்காண்டினேவியன் நாடுகளில் நிலைபெற்றிருக்கிறதல்லவா?

லிவிங்ஸ்டன்: ஆம், எல்லா நாடுகளிலும் இப்பொழுது மாணுக்கர்கள் அங்கேயே வாசம் செய்யக்கூடிய வயது முதிர்ந்தவர்களின் கல்வி திட்டம் நன்றாய் அபிவிருத்தியடைந்திருக்கிறது. டென்மார்க்கிலும், ஸ்வீடனிலும் ஒவ்வொன்றிலும் 60 கல்லூரிகளிருக்கின்றன. இரண்டு நாடுகளிலும் வெவ்வேறு திட்டங்கள் காணப்படுகின்றன. டென்மார்க்கில் சிறிய நிலஸ்வான்தார்களும், குடியானவர்களும், வீட்டு வேலைக்காரர்களும், 18 வயதுக்குப்பின் மூன்று அல்லது ஐந்து மாதங்கள் வரையிலுள்ள படிப்பைக் கற்றுக்கொள்ள கலாசாலைகளுக்குச் சென்று அங்கேயே தங்கியிருக்கிறார்கள். அங்கு தொழிற்களுக்கு வேண்டிய படிப்பு கற்பிப்பதில்லை. சரித்திரமும் இலக்கியமும் அடிப்படையாகக் கற்பிக்கப்படுகின்றன. தொழிலாளர்களும் வீட்டு வேலைக்காரர்களும் இவ்விதமான பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறார்களென்பது நமக்கு விநோதமாக இருக்கிறது. ஆனால் இது டென்மார்க்கில் சகஜமாக இருக்கிறது. ஸ்வீடனில் சிறிது மாறுதலிருந்த போதிலும் அதே வழிதான் பின்பற்றப்பட்டப்படுகிறது.

சார்ஜண்ட்: சமீப எதிர்காலத்தில் இந்தியாவில் நாம் செய்யக்கூடியதற்கு இது முற்போக்காகத் தான் இருக்கிறது. வயது முதிர்ந்தவர்களுக்குக் கல்வி என்பது சாதாரண இந்தியருக்கும், இந்தியாவிலுள்ள நம்மைப் போன்றவருக்கும் இலக்கியப் படிப்பாகத் தான் தோன்றுகிறது.

ஸ்டீட்: லிவிங்ஸ்டன், இப்பொழுது உள்ள முறைப்படி ஏற்படக்கூடியதைவிட உயர்வான விளைவுகளைக் கொடுக்கக்கூடிய மாறுதல்களைச் சொல்லுவீர்களா?

லிவிங்ஸ்டன்: சரி, சார்ஜண்டுக்கு ஒரு யோஜனையை விடுக்கிறேன். கிராமங்களிலுள்ள எல்லா விதமான வயது முதிர்ந்தவர்களுக்கும், சுகாதாரம், விவசாயம், மற்றும் வாழ்க்கைக்குதிய எல்லா விஷயங்களையும் கற்பிக்க முயற்சிக்கவேண்டாமா? அவர்களின் தேசியக்கவிகளையும், இலக்கியத்தையும் பாடமாகக் கற்பிக்கவேண்டும். நமது நாகரீகத்தில் ஜனங்கள் 18 வயதில் பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள், 22 வயதில் சர்வகலாசாலையிலிருந்து வெளியேறுகிறார்கள். அதன் பின் அது வரையில் கிடைத்த

அனுபவத்தையும் அபிப்பிராயங்களையும் கொண்டு அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். இது தவறானதென்று நான் நினைக்கிறேன். வாழ்நாட்களில் சில சமயங்களிலாவது அவர்களின் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவும், அவர்கள் நடைமுறை விஷயங்களை அறிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். எந்நிலைமையிலும் உலகம் ஒரே நிலையில் இருக்கவில்லை. வேலை சம்பந்தமாக இல்லாவிட்டாலும் வாழ்க்கை முறை சம்பந்தப்பட்டமட்டில் எல்லா மனிதர்களுக்கும் மறுமுறை போதனை ஏற்படவேண்டும்.

ஸ்டீட்: இந்திய சர்வகலாசாலைகள் உண்மையாக வயது முதிர்ந்தவர்களின் படிப்புக்குத் தயார் செய்ய வேண்டுமென்றும், அந்தக் கல்வி வாழ்க்கையின் மத்திய காலத்திற்கும் அதற்குப் பிறகும் பரவியிருக்க வேண்டுமென்றும் நினைக்கிறீர்களா?

லிவிங்க்ஸ்டன்: ஆம். இந்திய சர்வகலாசாலைகள் கலாசாலைக்கு வெளியிலும் இலாகாக்களைப் பெற்றிருக்கவேண்டும். பலவிதமான விஷயங்களையும் பலவிதமான நபர்களுக்கு போதிக்க வேண்டும்.

ஸ்டீட்: சர்வகலாசாலைப் படிப்பு விஸ்தரிப்பு என்று சொல்லுகிறீர்களா?

லிவிங்க்ஸ்டன்: ஆம்.

சார்ஜண்ட்: நான் இதை ஒப்புக்கொள்ளுகிறேன். தற்பொழுது சர்வகலாசாலை எக்ஸ்டன்ஷன் உபந்நியாசங்கள் நடைபெறுகின்றனவென்பது உண்மைதான். ஆனால் அவைகள் சர்வகலாசாலை மாணவர்களுக்குத்தான் பேசப்படுகின்றன. லிவிங்க்ஸ்டன் சொல்லுகிற யோஜனைகளுக்கும் நமக்கும் வெகு தூரமிருக்கிறது. இது வரையில் ஏழ்மைத்தனத்தினாலும், பிரச்னையின் அத்தியாவசியத்தினாலும் இந்தியாவில் வயது முதிர்ந்தவர்களின் கல்வி கல்வியறிவில்லாத இந்திய ஜனங்களின் 85 சத விகிதத்துக்குக் கல்வி அறிவு ஊட்டுவதுடன் நின்றுவிட்டதென்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த திட்டம் பயன்படவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனெனில் கல்வி அறிவு பெறும் ஒருவருக்கு அவருடைய அறிவை விருத்தி செய்துகொள்ள அவருக்கு சௌகரியமேற்படவில்லை. ஆடவர்களும், ஸ்திரீகளும் ஆயுள் பூராவும் தங்களுடைய வாழ்க்கையை பரிஷ்காரம் செய்து கொள்ளவேண்டும். அபிப்பிராயங்களைத் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயத்துக்கும் நமக்கும் வெகு தூரமிருக்கிறது.

ஸ்டீட்: லிவிங்க்ஸ்டன், நாளடைவில் சிறந்த பலனை அளிக்கக்கூடிய வகையில் வயது முதிர்ந்தவர்களின் கல்வியை ஏற்பாடு செய்வதென்ற சிக்கலான வேலையைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று சொல்லுவீர்களா?

லிவிங்க்ஸ்டன்: வாழ்க்கையை வெகு காலம் அனுபவித்த பின் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வேலையையும், வாழ்க்கையையும் பற்றிச் சிந்தனை செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் தேசம் பூராவும் சரியான கலைஞானம் ஏற்படும். அவ்விதம் இல்லாவிடில் ஒருபுரத்தில் மிகவும் உயர்தரமான கல்வி பெற்ற வகுப்பும், மற்றொருபுரத்தில் கல்வி பெறாத மற்றொரு வகுப்பும் காணப்படும்.

ஸ்டீட்: இதை எவ்விதம் ஏற்பாடு செய்வது. இதுபோல் இங்கிலாந்தில் ஒரு ஏற்பாடும் இருந்ததில்லையா?

லிவிங்க்ஸ்டன்: சரி, அது ஒவ்வொரு தேசத்தின் அமைப்பையும் பொருத்தது. மாணவர்கள் கலாசாலையிலே தங்கியிருப்பதுதான் சிறந்த திட்டம். இந்த முறையில் மாணவர்கள் வேலையிலிருந்து விலகி நிற்பார்கள். கல்லூரியில் வசிப்பார்கள். கல்வியில் பூராக் கவனத்தையும் செலுத்துவார்கள். ஒருவரோடு ஒருவர் கலந்து சர்ச்சையும் செய்து வரக்கூடும்.

சார்ஜண்ட்: இது டவுனில் சாத்தியமாகும். ஆகிலும் கிராமங்களைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள். இந்தியர்கள் பெரும்பாலும் கிராமங்களில் வசித்து வருகிறார்கள்.

லிவிங்க்ஸ்டன்: கிராமங்களிலிருந்து ஜனங்களை சர்வகலாசாலைக்கு அழைத்து வருவதைவிட நீங்கள் அவர்களிடம் சென்று அவர்களுக்குப் போதிக்க வேண்டும். வாழ்க்கையில் அனுபவம் பெற்ற பின்னர்தான் ஜனங்களுக்கு அதிகக் கல்வி வேண்டுமென்று நான் நினைக்கிறேன். பள்ளிக்கூடத்திலிருக்கும்பொழுது மாணக்கனுக்கு சுகாதாரத்தைப் பற்றிப் பேசினால் அவனுக்கு அது சங்கடமாக இருக்கும். அவன் கற்பித்ததையும் மறந்துவிடுவான். சுகாதாரமற்ற கிராமத்தில் அவன் வசித்து வரும்பொழுது அவனிடம் சுகாதாரத்தைப் பற்றி போதித்தால் அவனுக்கு அதில் அபிருசி ஏற்படும். இது போல்

தான் எல்லாக் கல்வியும். நாம் 20 வயதுக்கு முன்னுள்ளவர்களிடம் அதிக கவனம் செலுத்தி 20 வயதுக்குப் பின் உள்ளவர்களை அலக்ஷியம் செய்து வருகிறோமென்று எனக்குத் தோன்றுகிறது. இதன் பயனாக ஜனங்களின் புத்தி ஸ்தம்பித்துவிடுகிறது. ஏனெனில் பள்ளிக்கூடத்தையும் சர்வகலாசாலையையும் விட்டுச்சென்ற பின் அவர்கள் சிந்தனை செய்வதற்குச் சிறிது அவகாசம் கூடக் கிடையாது. இந்த அவகாசம் அவசியமாகும். ஜனங்கள் இதை உணர்ந்தால் அதற்குத் தேவையான வழிகளைத் தேடிவிடுவார்கள்.

ஸ்டீட்: ஆனால் வயது முதிர்ந்தவர்களுக்கு அவரவர்களுடைய நாட்டின் தேவைக்குள்ளபடி படிப்பு தரம் வாரியாக இருக்கவேண்டாமா?

லிவிங்க்ஸ்டன்: ஆம். வயது முதிர்ந்தவர்களுக்கு போதிக்கப்படும் கல்வி இருவகைப்படும். மிகவும் பயன்படக்கூடியது மாணவர்கள் அங்கேயே தங்கியிருப்பதென்பது ஒன்று. இந்த முறையில் ஜனங்களுடைய பூராக் கவனத்தையும் கல்வியில் செலுத்திவிடலாம். இரண்டாவது கல்லூரியில் தங்காமல் ஜனங்கள் ஓய்வு நேரத்தில் கற்றுக்கொள்ளும் கல்வி. நகரவாசிகள் காலேஜில் சேர்ந்து அங்கேயே தங்கியிருப்பதுதான் சிறந்தது. மேலும் அது தான் நடைமுறையில் உபயோகமுள்ளது.

ஸ்டீட்: பிள்ளைகள் தங்கியிருக்கக்கூடிய கல்லூரி தன்னைத்தானே போஷித்துக்கொள்ள போதுமான கோசத்தைப் பெற்றிருக்கவேண்டுமல்லவா, சார்ஜண்ட், இந்த திட்டம் இந்தியாவுக்குப் பொருந்துமா?

சார்ஜண்ட்: சரி, கல்விக்குத் தேவையான பொருளைச் சேர்ப்பதைப் பொருத்துத்தான் இது நடைபெறும். இது நமது திட்டத்தின் ஒரு அம்சமாகத்தானிருக்கும். 25 வருஷங்களுக்குள் கல்வியறிவு படைத்தவர்களாகச் செய்யவேண்டிய, 10 வயது முதல் 40 வயது வரையில் 90 மிலியன் பேர்களிருக்கிறார்களென்று ஒப்புக்கொண்டோமாகில் இந்த பிரச்னையின் மகத்துவம் தெரியவரும். அதைத் தவிர வயது முதிர்ந்தவர்களுக்கு உயர்தரக் கல்வியும் பயில்விப்பதற்கு ஏற்பாடு செய்துவருகிறோம். இலக்கியக் கல்வி இறுதியில் சாவதானமாக இந்த முறைக்குத் திரும்பிவிடும்.

ஸ்டீட்: இதை எவ்விதம் துவக்குவது.

சார்ஜண்ட்: முதலில் ஜனங்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அவர்களுக்குச் சிறிது கல்வி அறிவு ஏற்பட்டபின் உயர்தரப் படிப்புகள் போதிக்கப்படவேண்டும். இது மகத்தான பிரச்னை. ஒரு சிறிய அளவுக்குப் பிள்ளைகள் வசிக்க வசதியுள்ள பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கும் பொருளில்லை. அதற்கு ஏராளமானச் செலவு ஏற்படும். ஏற்கனவே செலவுகள் அதிகரித்துவிட்டன. இந்தியாவின் கல்வி நிலைமையைப்பற்றி ஒன்றும் செய்ய இயலாதென்று ஜனங்கள் நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஸ்டீட்: கைத்தொழிற் கல்வியும் ஒரு வகைப்பட்ட கல்வியல்லவா? அது கண்ணியத்திற்கும் புத்தி அபிவிருத்திக்கும் உதவக்கூடியது. வயது முதிர்ந்தவர்களின் படிப்பில் கைத்தொழிற் கல்வியையும் ஏற்பாடு செய்தால் அது ஜனங்களின் மனதைக் கவரும்.

லிவிங்க்ஸ்டன்: நான் ஒப்புக்கொள்ளுகிறேன். வயது முதிர்ந்தவர்களுக்கு எல்லா விஷயங்களையும் கற்பிக்கிறதாக இருக்கவேண்டும். அதாவது அவ்விஷயங்கள் ஜனங்கள் தங்களுடைய வாழ்நாளை ருசிகரமாகவும், புத்திசாலித்தனத்துடனும், சந்தோஷத்துடனும் கடத்த சாதகமளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். கைத்தொழில், இலக்கியம், நாடகம், கீதம், இன்னும் ஜனங்களுக்கு இயற்கையானதும், அவர்களுக்கு ருசிகரமான மற்றவைகளும், நல்ல வழியில் ஜனங்களைத் திருப்பிவிடும். ஜனங்கள் சாதாரணமாக அக்கரை எடுத்துக்கொள்ளக்கூடிய விஷயங்களை அவர்களுக்கு போதிக்கவேண்டுமென்பதுதான் இதன் ரகசியம்.

ஸ்டீட்: படிப்பை மனதைக் கவரக்கூடியதாகச் செய்தால் அவர்கள் சிறிது தியாகம் செய்தாவது கல்வி கற்கத் திரும்புவார்களென்று நினைக்கிறீர்களா.

லிவிங்க்ஸ்டன்: ஆம்.

ஸ்டீட்: அந்தந்த கிராமத்துக்குத் தகுந்த மாதிரி கல்வியை அமைக்கவேண்டாமா?

லிவிங்க்ஸ்டன்: ஆம். தரம் வாரியாகவும் அது வெவ்வேறு விதமாகப் போதிக்கப்படவேண்டும்.

சார்ஜண்ட்: வயது முதிர்ந்தவர்களின் கல்வியை இலக்கியத்திற்குமட்டுமில்லாமல் கைத் தொழில்களுக்கும் பரவச்செய்ய லிவிங்க்ஸ்டன் உத்தேசித்திருக்கிறார் என்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமான அவசியமான விஷயம் யாதெனில் இந்த வகுப்புகளுக்குச் சென்று பாடம் கற்றுக்கொண்டால் அவனுடைய பொருளாதார நிலைமையை அவன் அபிவிருத்தி செய்துகொள்ளலாமென்று விவசாயி நினைக்கும்படி ஏற்பாடு செய்வதுதான் மெத்த அவசியமாகும்.

ஸ்டீட்: பொருளாதாரத்தைப்பற்றிப் பேசும்பொழுது மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் உபகாரச் சம்பளம் கொடுப்பதினின்றும், அது இந்நாட்டிலுள்ள சர்வகலாசாலையின் படிப்பாளிகளை எவ்விதம் பாதிக்கிறதென்று நினைக்கிறீர்கள். உபகாரச் சம்பளமன்னியில் தாங்களே உயர்தரக் கல்வியைக் கற்றுக்கொள்ளுகிறவர்களைவிட இவ்விதம் செய்தால் மேதாவிகள் கோஷ்டிக்கு மிகுதியாக ஞானவான்கள் வந்துவிடக்கூடுமல்லவா?

லிவிங்க்ஸ்டன்: ஆம். ஆகிலும் முதல்தரமான புத்திசாலிகள் இருப்பது அரிது. ஆனால் ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களிலிருந்து நல்ல படிப்பாளிகள் வருகிறார்கள். நான் நினைத்திருக்கும் முறை நல்ல வழிதான்.

ஸ்டீட்: ஸ்திரீகளின் விஷயம் என்ன?

லிவிங்க்ஸ்டன்: மனிதர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் உயர்தரக்கல்வி அவசியமென்று வாதாடலாம். ஏனெனில் கல்வியறிவில்லாத ஒரு தாயார் இருந்தால் குழந்தைகளுக்குத்தான் கெடுதல். புத்திசாலியாகவும், கல்வி அறிவுள்ளதுமான தாயார் ஒருவளிருந்தால் ஆரம்பத்திலிருந்தே குழந்தைகள் நல்ல மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும்.

ஸ்டீட்: தாயார் எப்பொழுதும் குழந்தையின் க்ஷேமத்தைக் கோருகிறாள்.

சார்ஜண்ட்: நாங்களும் இவ்விதமே சிபார்சு செய்திருக்கிறோம். இந்தியாவின் பிரச்னையைத் தீர்த்துவிடுவதில் தகப்பனார்களைவிட தாயார்களுக்குத்தான் அதிகமான கல்வி வேண்டும்.

ஸ்டீட்,—ஆனால் இந்திய ஸ்திரீகள் பிள்ளைகளுக்கு கல்வி ஏற்பட்டால் போதுமென்றும், பெண்களுக்குத் தேவையில்லையென்றும் நினைக்கிறார்களல்லவா?

லிவிங்க்ஸ்டன்:—மேதாவியான ஸ்திரீயைக்கண்டு புருஷர்கள் பயப்படுகிறார்கள்.

சார்ஜண்ட்:—இந்தியாவில் பூராவாக அப்படியில்லை.

லிவிங்க்ஸ்டன்:—இங்கிலாந்திலுள்ள புருஷர் அவருடைய மனைவி குடித்தனத்துக்கு லாயக்குள்ளதும், அவருக்குத் தொந்திரவளிக்காததும், அவரைவிட அதிக மேதாவியாகவோ அல்லது சமதையாகவோ இல்லாத பெண்ஜாதி இருக்கவேண்டுமென்று விரும்புகிறார் அல்லவா?

ஸ்டீட்:—ஸ்திரீகளுக்குக் கல்வி பயில்விப்பதற்கு இதுஒரு ஆக்ஷேபணையாகாது.

லிவிங்க்ஸ்டன்:—இல்லை.

ஸ்டீட்:—உன்னுடைய கல்வி திட்டத்தை இப்பொழுதே அமுலுக்குக் கொண்டுவருவாயா அல்லது பொருள் கிடைக்கும்வரையில் காத்துக்கொண்டிருக்கப் போகிறாயா?

சார்ஜண்ட்:—பொருளுக்காகக் காத்திருக்கமுடியாது.

லிவிங்க்ஸ்டன்:—அது சரிதான். மற்றெந்த பாகத்தையும்விட வயது முதிர்ந்தவர்களின் கல்வியினின்றும் அதிக பலன் கிடைக்கும்.

ஸ்டீட்:—சார்ஜண்ட், உம்முடைய திட்டத்தில் இதற்கு இடமுண்டா?

சார்ஜண்ட்:—ஆம், முதல் 25 வருஷங்களில் 10 முதல் 40 வயது வரையிலுள்ளவர்களின் கல்வி அறிவின்மையை நாங்கள் ஒழித்துவிடுவோம். எங்களுடைய திட்டத்தில் கல்வியை அபிவிருத்தி செய்யவும் மற்ற போதனைகளைச் செய்யவும் இடமிருக்கிறது. ஜனங்களுக்கு இலக்கியம்மட்டும் பயில்விக்கப்படவேண்டுமென்பதை எங்களுடைய திட்டம் ஆக்ஷேபிக்கிறது. கல்வி அறிவை ஊட்டும் ஒரு திட்டத்தில் அதை வளர்ச்சிக்கப் போதுமான வசதியில்லாவிடில் அந்தக் கல்வி உபயோகமற்றது. லிவிங்க்ஸ்டனுடைய திட்டத்தை நாங்கள் அநேகமாகப் பின்பற்றுகிறோம். பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்கக்கூடிய சர்வகலாசாலைகளை அமைக்க வேண்டுமென்ற மிகவும் சிலாக்கியமான அபிவிருத்தியை

மட்டும் நாங்கள் பின்பற்றவில்லை. அந்த சர்வகலாசாலைகளில்தான் ஜனங்கள் திரும்பவும் சென்று தங்களுடைய கல்விப் பயிற்சியைப் புதுப்பித்துக்கொள்ளக்கூடும். ஆனல் இது நாங்கள் பரிசீலனை செய்யவேண்டிய பிரச்னைக்கு மிகவும் முற்போக்கானதாக இருக்கிறது.

லிவிங்க்ஸ்டன் :—ஏற்கனவே உயர்தரக் கல்வி கற்றவர்களுக்கும் செலவின் ஒரு அம்சத்தைப் பொருத்துக்கொள்ளக்கூடியவர்களுக்கு மட்டும் இதை ஏற்பாடு செய்யலாமே. அவர்கள் சிறுபான்மையாக இருந்தாலும் அவர்களின் செல்வாக்கு நாட்டிற்கு நலமளிக்கக் கூடுமல்லவா.

சார்ஜண்டு :—ஆம், நாங்கள் இதற்கும் ஏற்பாடு செய்கிறோம்.

ஸ்டீட் :—ஆகையால் ஜனங்களைக் கல்வி அறிவுள்ளவர்களாகச் செய்வதற்கு ஆரம்பக் கல்வி அவசியம். அத்துடன் மனித வாழ்க்கையின் பாதி அளவு காலம்வரையில் வயது முதிர்ந்தவர்களின் கல்வியும் அவசியம். இந்தக் கல்விதான் ஜனங்களின் வாழ்க்கையை வளர்ச்சி செய்யும். எதிர்காலத்துக்கும் உபயோகமுள்ளதாக இருக்கும்.

லிவிங்க்ஸ்டன் :—ஆம்.

ஸ்டீட் :—ஏனெனில் உள்நாட்டு சிரமங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் இந்திய ஜன சமூகத்தின் க்ஷேமத்தைக் கோருவதுதான் முக்கியமான லக்ஷியம்.

சார்ஜண்ட் :—சர்வகலாசாலையை அனுசரிக்காதவர்களின் க்ஷேமத்தை லிவிங்க்ஸ்டன் கோருகிறார் என்று நினைக்கிறேன்.

லிவிங்க்ஸ்டன் : ஆம். ஆகிலும் மற்றவர்களையும் நாம் கவனிக்கவேண்டியது அவசியம்தான்.

சார்ஜண்ட் : இந்திய சர்வகலாசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தொடர்பு கிடையாது. இதுதான் அவைகளுக்குள்ள குறைபாடு. எந்த சர்வகலாசாலைக்குச்சென்று ஒரு வகுப்பில் மூன்றுவது வரிசையிலுள்ள ஒரு பையனுடைய பெயர், ஊர் என்னவென்று ஆசிரியரைக் கேட்டால் ஒரு ஆசிரியரும் விடையளிக்கக்கூடவில்லை. ஆசிரியருடன் மாணவன் நெருங்கிப் பழகவேண்டுமென்பது இந்தியாவில் காணப்படவில்லை. நான் இந்தியாவில் படித்திருந்தால் எனக்குப் பட்டம் கிடைத்திராது. அங்கு ஒவ்வொரு மாணவரும் உபந்யாசங்களுக்கு இவ்வளவு சதவிகிதம் ஆஜராகியிருக்கவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது.

லிவிங்க்ஸ்டன் : ஆக்ஸ்போர்டிலும் கேம்பிரிட்ஜிலும் பிள்ளைகள் ஆசிரியர்களுடன் எவ்வளவு நேரம் சம்பாஷணை செய்கிறார்கள் என்பதுதான் முக்கியத்துவமுள்ளது. வாலிபமுள்ள ஒருவர் அனுபவம் வாய்ந்த வயது முதிர்ந்தவருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதினல் பிரயோஜனம் ஏற்படுகிறது. வயது முதிர்ந்த வருக்கும் சிறிது லாபம் கிடைக்கிறது. போதகருக்கு வாலிபர்களுடன் சேர்ந்து வாழ்வது தான் அவருடைய வாழ்க்கையில் ருசியுள்ளது.

சார்ஜண்ட் : இதை இந்தியாவில் ஏற்பாடு செய்வதில் இன்னும் சில அம்சங்களும் இருக்கின்றன. நான் சர்வ கலாசாலையில் படித்து வந்த பொழுது பிராக்டரோ, உதவி சான்ஸலரோ அல்லது எந்த சர்வகலாசாலை அதிகாரியோ ஒரு உத்திரவை பிறப்பித்தால் மாணவர் அதைக் கீழ்படியக் கூடாதென்ற மனப்பான்மை இருந்தது. ஆகிலும், போதகர் மாணக்களிடம் சென்று "நீ, ஒரு முட்டாளல்லவா, இந்த வாரத்தில் இரண்டு தடவை அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்பட்டாயல்லவா" என்று சொன்னல் அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். அதிகாரவர்க்கத்தார் கண்டித்திருந்தாலும் அது பயன்படாது. இவ்விதமாக ஆசிரியர்களுக்கும் மாணக்கர்களுக்கும் இந்தியாவின் சர்வகலாசாலைகளில் தொடர்பு கிடையாது. "நீ ஒரு முட்டாளல்லவா" என்று ஸ்நேக பாவத்தில் சொல்லக்கூடிய எவரும் இந்திய கலாசாலைகளில் கிடையாது.

ஸ்டீட் : நம்முடைய முடிவு பின்வருமாறு. ஆசிரியர்களுக்கும் மாணக்கர்களுக்கும் அதிகமாகத் தொடர்பு இருக்கவேண்டும். ஆசிரியர்கள் போதிக்கும் மாணவர்களின் சங்கியைக் குறைவுபட வேண்டும். இந்தியாவில் உயர்தரக் கல்வியை ஆரம்பிப்பதில் செலவைப் பொருட்படுத்தக் கூடாது. அதாவது ஆர்வமிருந்தால் அதற்குத் திறப்பு ஏற்படும்.

# 'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில்
முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 225. (5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 25-11-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 7.00 |
| 26-11-44 | ஆலங்குடி | ... | ,, | 7.00 |
| ,, | ராசியமங்கலம் | ... | ,, | 7.30 |
| 27-11-44 | திருமெய்யம் | ... | ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... | ,, | 7.30 |
| 28-11-44 | பள்ளிவாசல் | ... | ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... | ,, | 7.30 |
| 29-11-44 | புலியூர் | ... | மாலை | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... | ,, | 7.00 |
| 30-11-44 | அன்னவாசல் | ... | ,, | 7.30 |
| ,, | கீழக்குறிச்சி | ... | ,, | 7.00 |
| 1-12-44 | கீழாநிலை-புதுப்பட்டி | ... | ,, | 7.30 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 7.30 |

### பிரஸங்கம் 226 (6-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 2-12-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.00 |
| 3-12-44 | கீரனூர் | ... | ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் | ... | ,, | 7.30 |
| 4-12-44 | குடுமியாமலை | ... | ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... | ,, | 7.30 |
| 5-12-44 | பெருங்களூர் | ... | ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... | ,, | 7.30 |
| 6-12-44 | உடையாளிப்பட்டி | ... | மாலை | 7.00 |
| ,, | இள்ளுகோட்டை | ... | ,, | 7.30 |
| 7-12-44 | மிரட்டுநிலை | ... | ,, | 7.00 |
| ,, | அரிமளம் | ... | ,, | 7.30 |
| 8-12-44 | பொ. புதுப்பட்டி | ... | ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... | ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 25—11—44 | வெட்டம்விடுதி. |
| 26—11—44 | ஏம்பல். |
| 28—11—44 | கோனாபட்டு. |
| 30—11—44 | ஆலங்குடி. |
| 1—12—44 | புதுக்கோட்டை. |
| 2—12—44 | பொன்னமராவதி. |
| 3—12—44 | விராச்சிலை. |
| 5—12—44 | பேராம்பூர். |
| 7—12—44 | குழிபிறை. |
| 8—12—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—29-11-44.